Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579 - 2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu

www.nimirvu.org


பார்வை – 14 | பங்குனி, 2018 | பக்கங்கள் – 24 | விலை – ரூபா 20.00



**சுயமாக கருவாடு உற்பத்தி செய்து சாதிக்கும் தம்பாட்டி மீனவர்கள்**



**தமிழ் மக்கள் பேரவையின் எதிர்காலம்**



**கிழக்கு மக்களின் பூர்வீகமும் காணிப் பிரச்சினைகளும்**



# இன்னும் எத்தனை மரணங்கள் வேண்டும்?

ஆராயும் அறிவே நிமிர்வு

அட்டைப்படம் : மு.தமிழ்ச்செல்வன்




# சுயமாக கருவாடு உற்பத்தி செய்து சாதிக்கும் தம்பாட்டி மீனவர்கள்

எம்.நியூட்டன்

ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள தம்பாட்டி கிராம மக்களுக்கு கடற்தொழில் தான் பிரதான வாழ்வாதாரத் தொழில். இத்தொழில் மூலம் வருமானத்தை ஈட்டுவது மட்டுமல்லாது தமது கிராமத்தையும் முன்னேற்றி வருகிறார்கள். தமது கடற்றொழில் சங்கத்தின் மூலம் பல வகையான தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. தம்பாட்டி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் பல சமூகநல செயற்பாடுகளைத் திட்டமிட்டு செய்து வருகின்றனர். இம் முயற்சிகள் தொடர்பில் அதன் செயலாளர் அ.அன்னராசா பல தகவல்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

இச் சங்கத்தில் அங்கத்தவர்களுக்கான நலத் திட்டங்கள் பல உள்ளன. அங்கத்தவர் சேமிப்பு, வங்கிகள் ஊடான கடனுதவி, சமூக அமைப்புகளூடான உதவிகள் என்பவற்றை வழங்குகிறோம். தொழிலில் ஈடுபடும் போது உயிர் இழப்பு ஏற்படின் 25 ஆயிரம் ரூபா நட்ட ஈடு வழங்குகிறோம். கண்ணாடியிழை வள்ளங்களை வாடகைக்கு விடுகிறோம்.

இவற்றை விட சமூக நலத்திட்டங்களாக காந்திஜி முன்பள்ளியினை நிர்வகிக்கிறோம். புலமைப்பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களுக்கு பாராட்டுதலும் பத்தாயிரம் ரூபா பண உதவியும் வழங்கப்படுகின்றன. வெளிவாரி பட்டதாரிகளை பாராட்டுவதும், இறந்தவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிடுவதும் எமது ஏனைய செயற்பாடுகளாகும்.

காந்திஜி சனசமூக நிலையம், காந்திஜி நாடக மன்றம், முத்துமாரி அம்மன் ஆலயம், காந்திஜி விளையாட்டுக்கழகம், கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன எமது கடற்தொழிலாளர் சங்கத்திடம் இருந்து நிதி உதவிகளைப் பெறுகின்றன.

நாம் 2013 ஆண்டு முதல் செயற்பட்டு வருகின்றோம். கடல் தொழில் அமைச்சு, திணைக்களம் என அரசாங்க நிறுவனங்கள் இருந்தாலும் அவர்கள் எப்பவாவதுதான் உதவிகள் செய்வார்கள். அதுவும் முழுமையாகக் கிடைப்பதில்லை. மானியத்திற்கு பல உதவித் திட்டங்கள் செய்தாலும் எமக்கு அவை கிடைப்பதில்லை. வெறும் பதிவுகள் மட்டுமே நடைபெறுகின்றது. 2012 ஆம் ஆண்டுக்கு முன் பதிவு செய்தவர்களுக்கே உதவித் திட்டங்கள் வழங்கப்படுகின்றது. 2013 ஆண்டுக்குப் பின்னர் பதிவு செய்தவர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை. கடலில் ஏற்படுகின்ற ஆபத்தான சூழலின் போது பாதுகாப்பாக தொழிலினை மேற்கொள்வதற்கு ஏற்ப பாதுகாப்பு அங்கிகள் எவையும் கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை.

எமது கிராமிய கடற்தொழில் சங்கத்தினால் கருவாடு பதனிடல் தொழில் முயற்சி செய்து வருகின்றோம். இதற்கான நிதி உதவி எமது சங்கத்தாலும் ஏனைய நிதி நிறுவனங்களாலும் வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று UNDP நிதி உதவியுடன் தம்பாட்டியில் நண்டு பதனிடும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

எமது சங்கத்தின் கருவாடு பதினிடும் தொழில் முயற்சி ஊடாக எமது கிராமத்தைச் சேர்ந்தவர்களில் 67 பேருக்கு வேலைவாய்ப்புக் கொடுத்துள்ளோம். தரமான கருவாட்டை ஏற்றுமதி செய்கின்றோம். இதற்காக துறை சார்ந்த பயிற்சிகளையும் வழங்கி வருகின்றோம். கருவாடு பதனிடும் தொழில் 2013 ஆம் ஆண்டு ஆரம்பித்த காலம் முதல் எமது ஏற்றுமதிக்காக பல கண்காட்சிகளில் எமது உற்பத்திகளைக் காட்சிப்படுத்தியுள்ளோம்.

ஆரம்பத்தில் இரண்டு, மூன்று பணியாளர்களுடன் இருந்து இன்று 15,16 பேருக்கு அலுவலக வேலைவாய்ப்புக்களும் கிடைத்துள்ளன. எமது சங்க அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன் பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடனும் நாம் முன்னேற்றகரமான வழியில் சென்று கொண்டிருக்கிறோம். எமது முன்னேற்றத்திற்காக முழுமையான ஒத்துழைப்பை பிரதேசசெயலர் வழங்கி வருகின்றார். எமது பகுதியில்

துறைமுகம் இல்லை. இது தொடர்பில் பிரதேச செயல ருடன் கதைத்தோம். இந்த வருடம் நிதி ஒதுக்கீடு செய்து தருவதாக உறுதியளித்துள்ளார்.

தீவகத்தைப் பொறுத்தவரையில் பின்தங்கிய நிலையில் பல குடும்பங்கள் உள்ளன. அதிலும் ஊர்காவற் றுறையில் எமது தம்பாட்டி கிராமத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகமாக இருக்கின்றன. தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் மொத்த அங்கத்தவர்கள் 357 பேர் பதிவில் உள்ளார்கள். இவர்களில் 55 பேர் பெண்கள். எமது கிராமத்தில் 305 குடும்பங்கள் கடற்றொழிலை நம்பி யுள்ளன. இவற்றுள் 25 குடும்பங்கள் பெண் தலைமைத் துவக் குடும்பங்கள். எமது அங்கத்தவர்களில் இறால் தொழிலை 160 பேரும் நண்டு தொழிலை 120 பேரும் செய்கிறார்கள். 65 மரவள்ளங்களும், 27 கண்ணாடி யிழை வள்ளங்களும், 5 கண்ணாடியிழைப் படகுகளும், 20 வெளியிணைப்பு இயந்திரப் படகுகளும் எமது சங்கத்தில் பதிவுகளை கொண்டுள்ளன.

போதிய கடல் வளம் இருந்தும் ஆழ்கடல் சென்று மீன்பிடித் தொழிலைச் செய்வதற்கு அடிப்படை வசதிகளற்ற நிலையில் நாம் இருக்கிறோம். துறைமுகமோ ஆழ்கடல் படகுகளோ இல்லாத நிலையில் போதிய தொழிலாளர்கள் இருந்தும் முன்னேற வாய்ப்பில்லாமல் உள்ளது. இந்த வளங்கள் கிடைக்கும் பட்சத்தில் நண்டுத் தொழிற்சாலை யில் 100க்கு மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய வகையில் மூலப் பொருட்களை எமது அங்கத்தவர்களால் வழங்க முடியும். இவ்வாறான நிலை ஏற்படும்போது வேலைவாய்ப்பை பெறுகின்றவர்கள் மட்டுமன்றி கிராமம், மற்றும் அந்தப் பிரதேசம் முழுமை யான வளர்ச்சியினைக் காண முடியும்.

நாம் பல துன்பங்கள், துயரங்கள் மத்தியில் முன்னேறி வருகின்றோம். வடக்கு மாகாணத்தில் தொழிற் சாலைகள் அமைக்கப்படவேண்டும். முதலீடுகள் வடக் கிற்கு வரவேண்டும் என மேடையில் கூறும் அரசியல் வாதிகள் எமது பகுதி தொழிற்சாலைகள் தொடர்பில் கண்டு கொள்வதில்லை. வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரை கடல் பெரும் வளமாக உள்ளது. கடலில் வாழும் உயி ரினங்களைக் கொண்டு அந்த தொழிலில் இருப்பவர்களை எவ்வாறு வலுவூட்டவேண்டும் என்ற சிந்தனை இல்லை. நாம் எதிர்பாக்கின்ற உதவிகள் கிடைப்பதில்லை. எமது தொழிலை ஊக்கப்படுத்துவதற்கு எவரும் முன்வராத நிலையே தெரிகின்றது.

நாம் எமது தொழிலை கூட்டுறவாக செய்து வருகின்ற போது தனியார் நிறுவனங்களுடன் போட்டிகள் நிலவுவதால் முன்னேற்றத்தை அல்லது எமது இலக்கை அடைய முடியாது உள்ளது.



**“நாம் பல துன்பங்கள், துயரங்கள் மத்தியில் முன்னேறி வருகின்றோம். வடக்கு மாகாணத்தில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டும் முதலீடுகள் வடக்கிற்கு வரவேண்டும் என மேடையில் கூறும் அரசியல்வாதிகள் எமது பகுதி தொழிற்சாலைகள் தொடர்பில் கண்டு கொள்வதில்லை”**

எமது சமூகத்திற்கு வேலைவாய்ப்பை அதிகரிக்க வேண்டும் என்பது எமது நோக்கம். அவர்களுக்கு லாபம் ஒன்றே நோக்கம். நாம் சிறிய தொழில் முறைகளை பின்பற்றி வருகின்றோம். அவர்கள் பெரிய நீண்டநாள் கலங்களைப் பயன்படுத்துகிறார்கள். எனினும் நாமும் அடுத்த கட்ட நடவடிக்கையாக நீண்டநாள் கலம் மூலமான தொழிலை செய்வதற்கு முயற்சிக்கின்றோம். கடல் வளம் இருந்தும் மூலதனப் பற்றாக்குறையால் அதனை முழுமையாகப் பயன்படுத்த முடியாது உள்ளது.

ஆரம்பத்தில் எமது சங்கத்தினர் கடலுக்குச் சென்று வந்து மீன்களை பதனிடாமல் விற்பனை செய்தோம். பின்னர் பதனிடும் தொழிலை மேற்கொண்டோம். அதனைத் தொடர்ந்து ஏற்றுமதி செய்தோம். இவ்வாறு மெல்ல மெல்ல நாமாக முன்னேறி வருகிறோம். கடற்றொழில் அமைச்சு, வடக்கு மாகாண சபை என்பவை அடுத்தகட்ட நகர் வுக்கு எமக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் எமது கிராமம் மட்டுமல்லாமல் அயல் கிராமங்கள், தீவகம், மாவட்டம் என முன்னேறி பல வேலைவாய்ப்புக்களை உருவாக்க முடியும். வாழ்வாதாரத்திலும், பொருளாதார ரீதியிலும் முன்னேற முடியும். இவ்வாறு தம்பாட்டி கிராமிய கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்க செயலாளர் கூறினார்.

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

# ஆசிரியர் பார்வை

“தமிழர்களுக்கு எதிரான போரில் முஸ்லிம் மக்கள் அரசாங்கத்துக்கு மிக முக்கியமான உதவிகளை வழங்கினர். எனவே சிங்கள மக்கள் முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும். அவ்வாறு நிறுத்த தவறினால் அவர்களை சுட்டுக் கொல்லவும் நாம் தயங்க மாட்டோம். அவ்வாறு சுட்டுக் கொல்ல படையினரால் முடியும் என தமிழருக்கு எதிரான போரில் நாம் நிரூபித்தும் உள்ளோம்”. சிறிலங்கா அரசின் கூட்டுப் படைகளின் தளபதி ரவீந்திர விஜயகுணவர்த்தன தெரிவித்த கருத்துக்கள் இவை.

பங்குனி மாதம் 4 ஆம் திகதி தெல்தெனிய-திகன பகுதிகளில் சிங்கள இனவாதிகளால் முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல்கள் ஆரம்பித்தன. அங்கு ஆரம்பித்த தாக்குதல்கள் கண்டி மாவட்டத்தில் ஏனைய பகுதிகளுக்கும் பரவி ஏறத்தாழ ஐந்து நாட்களாக நீடித்தன. மைத்திரி-ரணில் அரசாங்கம் கலவரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இராணுவத்தையும் விசேட அதிரடிப்படையையும் களமிறக்கியது. ஆனால் அப்படையினரோ தாக்குதலில் ஈடுபட்ட சிங்களவரை தடுப்பதில் அக்கறை செலுத்தியதாக தெரியவில்லை. சேதமாக்கப்பட்ட முஸ்லிம்களின் பள்ளிவாசல்களுக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு வழங்குவதை மட்டுமே அவர்கள் செய்து கொண்டிருந்தனர்.

இக்கலவரங்கள் உலகநாடுகளின் முக்கியமாக முஸ்லிம் நாடுகளின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கின. உல்லாசப்பயணத்துறை போன்ற பல தொழிற்துறைகள் பாதிப்புக்குள்ளாகின. ஆகவே கலவரத்தை அடக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து கலவரத்தை அடக்குவதற்காக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி பங்குனி 7 ஆம் திகதி கூட்டப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டிலேயே கூட்டுப்படைத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். தமிழர்களுக்கு எதிரான போரில் இனவாத அரசாங்கம் இன்னொரு இனத்தை எவ்வாறு பயன்படுத்தியதென அவர் தெளிவாக்குகிறார். அப்போரை நடத்துவதில் தாம் கைக்கொண்ட உத்திகளையிட்டு அரச படையினர் எவ்வாறு பெருமைப்படுகிறார்கள் என்பதை வெளிப்படுத்துகிறார்.

இனவாதம் தவறானது, ஆகவே சிறுபான்மையினரைத் தாக்காதீர்கள் என அவர் கூறவில்லை. முஸ்லிம் மக்கள் எமக்கு உதவியவர்கள் எனவே அவர்களை விட்டு விடுங்கள் என்றே அவர் கூறுகிறார். அப்படியாயின் தமிழருக்கு எதிரான யுத்தத்தில் முஸ்லிம்கள் உதவி செய்திருக்காவிடின் அவர்களின் நிலை என்னவாக இருந்திருக்கும் என்ற கேள்வி இங்கு எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

பங்குனி மாதம் கண்டியில் இனக்கலவரங்கள் ஆரம்பிக்க முன்னர் கிழக்கில் அம்பாறையில் மாசிமாதம் முஸ்லிம் மக்கள் மீது இன்னொரு தாக்குதலை சிங்களவர்கள் நடத்தி முடித்திருந்தனர். இவ்வாறான தாக்குதல்கள் இலங்கையில் சிங்கள இனவாதம் ஏனைய சிறுபான்மை இனங்கள் தொடர்பாக என்ன நிகழ்ச்சி நிரலைக் கொண்டுள்ளது என்பதைக் காட்டுகின்றன. சிங்கள அரசாங்கத்துடன் ஒட்டி உறவாடி முஸ்லிம் மக்களுக்கு சலுகைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று செயற்பட்டு வந்த முஸ்லிம் அரசியல் தலைவர்களின் முகத்தில் அறைந்துள்ளன.

சிங்கள அரசாங்கத்துடன் இணக்க அரசியலை மேற்கொண்டு மலையக மக்களின் முன்னேற்றத்தை அடையலாம் என மலையகத் தலைமைகள் ஒரு காலத்தில் நம்பின. அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசுகளுடன் இணைந்து அவற்றின் ஆட்சியை பலப்படுத்த உதவின. ஆனால் இன்று அம்மக்களின் நிலையை நோக்குகையில் அவர்களின் அரசியல் மற்றும் பொருளாதார இருப்பு எந்த வகையில் திட்டமிட்டு சிதைக்கப்பட்டுள்ளது என்பதைக் காணலாம். இவ்வாறான ஒரு நிலமைக்கு முஸ்லிம் சமூகமும் தள்ளப்படும் நிலை வெகு தொலைவில் இல்லை. இதனை முஸ்லிம் சமூகம் எந்தளவுக்கு விரைவில் உணர்கிறதோ அந்தளவுக்கே அவர்கள் தம்மைப் பாதுகாக்க முடியும்.

கலவரத்தை அடக்கும் ஓர் உத்தியாக பேஸ்புக், வாட்ஸப் உள்ளிட்ட சமூக ஊடகங்களை அரசாங்கம் தடை செய்தது. கலவரத்தை தூண்டவும் பரப்பவும் இவ்வூடகங்கள் துணை போவதாக குற்றம் சாட்டியது. இந்த ஊடகங்கள் தான் கலவரத்துக்கு காரணம் என்றும் அவற்றை உரிய முறையில் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கூறி கலவரம் தொடர்பான கருத்தாடல்களை திசை திருப்ப அரசாங்கம் முயற்சிக்கிறது. கலவரத்துக்கு காரணம் சிங்கள மக்கள் மத்தியில் புரையேறிப் போயுள்ள சிங்கள இனவாதம் தான் என்பதை அரசாங்கம் ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை என்பதை இந்த நடவடிக்கை காட்டுகின்றது.

இலங்கையில் முஸ்லிம் சமூகம் எண்ணிக்கையில் துரித வளர்ச்சியடைந்து வருகிறது. இது சிங்கள இனவாதத்துக்கு கவலையளிக்கிறது. அதேவேளை எண்ணிக்கை அதிகரிப்பாலும் தமது பொருளாதார வளர்ச்சியாலும் ஒரு போலித்தனமான பாதுகாப்பை முஸ்லிம் சமூகம் உணருகிறது. அது எந்த அளவுக்குப் போலியானது என்பதை அம்பாறையும் திகனவும் அடித்துச் சொல்லுகின்றன. என்ன செய்யப் போகிறார்கள் இலங்கை முஸ்லிம்கள்?

- செ. கிரிசாந் -

# ஈழத் தமிழ் பெண்கள் கடந்து வந்த பாதை

செல்வி. டினோசா இராஜேந்திரன்
உதவி விரிவுரையாளர்-வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பகுதி 02




**“தேர்தல் சட்டத்தின் படி 25 வீதமான ஆசனங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டும் அவர்களின் பிரதிநிதித்துவம் அந்த அளவிற்கு எட்டப்படவில்லை. பெண் வேட்பாளர்கள் இரண்டாம் நிலைப் பட்டியலில் சேர்க்கப்பட்டனர்”**

**பெண் அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டத்தில் பெண்களுக்கான வாக்குரிமை போராட்டம் ஒரு முக்கியமான ஆரம்பப் புள்ளியாகும். வாக்குப் பலத்தால் பெண்களும் ஒரு நாட்டின் அரசியலைத் தீர்மானிப்பதற்கு உரித்துடையவர்கள் ஆகிறார்கள். ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமாயின் பெண்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று ஆணாதிக்க அரசியல்வாதிகளை எண்ண வைப்பது பெண்களுக்கு உள்ள வாக்குரிமை.**

பெண்களுக்கான வாக்குரிமை இலகுவில் கிடைத்த ஒன்றல்ல. பல நீண்டகாலப் போராட்டங்களின் விளைவாகவே அது அடையப்பட்டது. ஆனால் இந்த உரிமை குறிப்பாகத் தமிழ்ப் பெண்களால் உரியமுறையில் பயன்படுத்தப்படுகிறதென கூறமுடியாது. நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் வேட்பாளர் பட்டியல் தயாரிப்பிலிருந்து பிரச்சார நடவடிக்கைகள் உள்ளீடாக பெண்கள் இரண்டாம் பட்சமாகவே நடத்தப்பட்டனர். தேர்தல் சட்டத்தின் படி 25 வீதமான ஆசனங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டும் அவர்களின் பிரதிநிதித்துவம் அந்த அளவிற்கு எட்டப்படவில்லை. பெண் வேட்பாளர்கள் இரண்டாம் நிலைப் பட்டியலில் சேர்க்கப்பட்டனர். சில பெண் வேட்பாளர்கள் பயமுறுத்தப்பட்டனர். சிலர் சமூகவலைத்தளங்களினூடாக பாலியல் ரீதியில் கேலி செய்யப்பட்டனர். இந்த நிலை இனியும் தொடராமல் இருக்க வேண்டுமாயின் தமிழ் பெண்கள் அரசியல் விழிப்படைய வேண்டியது அவசியம். தமது வாக்குரிமையை தமது விடுதலைக்குப் பயன்படும் வகையில் உபயோகிக்க வேண்டும்.

ஈழத்தமிழ் பெண்களின் முன்னேற்றப் பாதையில் பிரதானமான கட்டமாக பார்க்கப்படும் காலப்பகுதி பிரித்தானியர் ஆட்சிக் காலமாகும். பிரித்தானியர் இலங்கையினை ஆட்சி செய்த காலப்பகுதியினுள் எமது தனித்துவம் அவர்களால் பறிக்கப்பட்டதென பல குறைகளை அவர்களின் மீது சுமத்துகின்றோம். ஆனால் பெண்களைப் பொறுத்தவரையில் பெண்கள் வீறு கொண்டு எழுந்த காலம் பிரித்தானியர் காலமே. தமிழ் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் உரிமை, சமத்துவம், சுதந்திரம் என்பவை வெறுமனே ஆண்களுக்கு மட்டும் உரியது என பார்க்கப்பட்டதை கடந்த பகுதியில் தெளிவுபடுத்தி இருந்தோம். ஆனால் அவை அனைத்தும் ஆண்களைப் போல பெண்களும் அனுபவிக்க வேண்டும் என்பதை உணர்த்தி அதற்கான போராட்டங்களை முன்னெடுத்த காலம் ஆங்கிலேயர் ஆட்சிக்காலமாகும்.

குறிப்பாக சமுதாயம் என்பது பல சிறு குழுக்களைக் கொண்ட கூட்டமைப்பாகும். இந்த சமுதாய கூட்டமைப்பினுள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என சகல தரப்பினரும் சமமாக நடாத்தப்படல் வேண்டும். இத்தகைய நடுநிலைமையை வென்றெடுப்பதற்காக பெண்கள் தாமாகவே முன்வந்து தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான வாய்ப்பு தமிழ் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் பிரித்தானியர் ஆட்சியின் போதே கிடைக்கப்பெற்றது.

இலங்கையை பிரித்தானியர் தமது ஆட்சியின் கீழ் 1796-1948 வரை வைத்திருந்தார்கள் என்பதை அனைவரும் அறிவர். அக்கால கட்டத்தில் பிரித்தானியாவில் பெண்கள் தமது வாக்குரிமையை பெற்றெடுப்பதற்கு பல போராட்டங்களை செய்தனர். இருப்பினும் உலக வரலாற்றினை பொறுத்தவரையில் 1789 ஆம் ஆண்டு ஆனி மாதம் 14 ஆம் திகதி பாரிசில் பிரெஞ்சுப்புரட்சியின்போது பெண்கள் முதல் முதலாக போர்க்கொடி உயர்த்தினார்கள். இச்சந்தர்ப்பத்தில் தான் “பெண்களும் ஆணுக்கு சமமாக உரிமைகளை பெற வேண்டும்” என்றும், “வேலைக்கேற்ற ஊதியம் வழங்கப்பட வேண்டும்” என்றும், “பெண்கள் அடிமைகளாக நடாத்தப்படுவதில் இருந்து விடுதலை பெற வேண்டும்” என்று பெண்கள் சார்பான மேன்மையை வலியுறுத்தி பல பெண்கள் போராடினர்.

இப்போராட்டமே பெண்கள் தம் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான முதலாவது போராட்டமாக

அமைந்தது எனலாம். இப் போராட்டத்தின் வேகம் பல நாடுகளிற்கு ஒரே காலகட்டத்தில் கொண்டு செல்லப்பட்டது. இதனால் பலநாடுகளில் வாழும் பெண்களும் தமது ஆதரவை இதற்கு தெரிவித்ததுடன், தமது நாடுகளிலும் “பெண்கள் உரிமைக்கான போராட்டத்தினை வலுப் படுத்த வேண்டும்” என்ற யதார்த்தத்தினை உணர்ந்து கொண்டனர்.

இவ் வரலாற்றுப் புரட்சியின் அடுத்த கட்டம் இங்கிலாந்தில் ஒலித்தது. அதாவது பிரெஞ்சு புரட்சி என்பது அரசியல், பொருளாதார, சமூகம் சார்ந்த ஒரு பன்முகப்படுத்தப்பட்ட புரட்சி ஆகும். ஆனால் இதன் அடுத்த கட்டமாக இங்கிலாந்தின் பெண்கள் அமைப் புக்களால் “பெண்களுக்கு சுதந்திரம், சமத்துவம், போன்றவற்றை வழங்குவதற்கு முன்னர் அவர்களுக்கு வாக்குரிமையை வழங்குங்கள். ஏனெனில் வாக்குரிமை என்ற ஓர் ஆயுதம் பெண்கள் சார்ந்த சகல ஒடுக்கு முறைகளையும் வெல்வதற்கு உதவும்” என்பதனை 20 ஆம் நூற்றாண்டில் வெளிப்படுத்தினர். இதனால் இங்கிலாந்தில் பெண்கள் வாக்குரிமைக்காக போராடிய இவ்வமைப் பிற்கு பெண்கள் வாக்குரிமை போராளி என்ற பட்டப் பெயரும் வழங்கப்பட்டது.

இங்கிலாந்தில் 1918பங்குனி மாதம் நிறைவேற்றப் பட்ட மக்கள் பிரதிநிதித்துவ சட்டமூலத்தில் 30 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. அதுவும் சில தகைமைகளைக் கொண்ட பெண்களுக்கே இது வழங்கப்பட்டது. ஆண்களைப் பொறுத்தவரை 21 வயதிற்கு மேற்பட்ட எல்லா ஆண்களுக்கும் வாக்குரிமை வழங்கப் பட்டது. இவ்வாறான பாரபட்சம் இருந்த போதிலும் இச்சட்டமூலம் பெண் வாக்குரிமைப் போராளிகளால் பெரும் வெற்றியாகக் கொண்டாடப்பட்டது. இதில் நகைப்புக்குரிய விடயம் என்னவெனில் அதே ஆண்டு கார்த்திகை மாதம் நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் 21 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் பாராளுமன்ற உறுப்பினரா கலாம் என சொல்லப்பட்டது, ஆனால் அவர்கள் 31 வயது வரை வாக்களிக்க முடியாது. இறுதியில் 1928 ஆம் ஆண்டிலேயே ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம வாக்குரிமை வழங்கப்பட்டது.

**“தமிழ் பெண்கள் அரசியலில் விழிப்படைய வேண்டியது அவசியம். தமது வாக்குரிமையை தமது விடுதலைக்குப் பயன்படும் வகையில் உபயோகிக்க வேண்டும்”**

இங்கிலாந்தில் தொடங்கப்பட்ட இப்போராட்ட வடிவம் பிற்பட்ட காலத்தில் இலங்கை உட்பட பிரித்தானியர் ஆட்சி செய்த சகல நாடுகளிற்கும் பரவியது. இதன் தாக்கத்தின் விளைவாக இலங்கையிலும் பெண்கள் தமது வாக்குரிமையை வென்றெடுக்க முன்வந்தனர். இந்த முன்வருகை தமிழ் சமுதாயத்தின் பழமைசார் கருத்துக்களை புறந்தள்ளி வாக்குரிமை விடயத்தில் ஆரோக்கியமான சமத்துவமான சமுதாயத்தை உருவாக்கு வதற்கு காரணமாயிற்று. காரணம் பிரித்தானியர் ஆட்சியில் உருவாக்கப்பட்ட அரசியல் சார் விடயங்களில் எல்லா சாதியினரும் உள்நுழைவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இச் சந்தர்ப்பத்தினால் இதுவரை தமிழ் சமுதாயத்தில் சாதி ரீதியாக காட்டப்பட்ட அடக்குமுறை ஓரளவு தளர்வடையத் தொடங்கியது.

வாக்குரிமையில் மட்டுமல்ல, பெண்களும் ஆண்களைப் போல கல்வி கற்பதிலும், அரச தொழில் களில் ஈடுபடுவதற்கும் ஆர்வம் உள்ளவர்களாக மாறினர். இவ்வார்வம் ஆண்களைப் போலவே பெண்களும் கல்வி கற்கவும், ஏனையவர்களுடன் சமமாகப் பழகவும் ஏற்புடையோர் என்ற சிந்தனையை ஏற்படுத்தியது. இச்சிந்தனை சமத்துவம் என்ற சொல்லினை தமிழ் சமுதாயத் தில் ஓங்கி உரக்கச் செய்தது எனலாம்.

தமிழ் பெண்கள் வெறுமனே மேற்கத்தைய கல்வியில் நாட்டம் உடையவர்களாக இருக்கவில்லை. மேற்கத்தைய நாகரிகத்தினையும் பார்த்துப் பழகிக் கொள்ள முற்பட்டனர். இம்மாற்றம் தமிழ்ச் சமுதாயத்தில் பெண் அடக்குமுறைக்கு எதிரான போரை முன்னெடுக்க பெரிதும் உதவியது எனலாம்.

“ஆணுக்கு பெண் சரி நிகர் சமன்” எனும் பாரதி வரிகளை பிரித்தானியர் காலத்தில் தான் எமது சமுதாயம் உணர்ந்து கொண்டது எனலாம். இருப்பினும் பெண்களுக்கு 1930இல் டொனமூர் அரசியலமைப்பின் கீழ் வழங்கப்பட்ட வாக்குரிமை சாதாரணமாக கிடைத்த ஒன்றல்ல. ஏனெனில் தமிழ் சமுதாய சிந்தனைகளில் மூழ்கி இருந்த பலர் இவ் வாக்குரிமையை பெண்களுக்கு சுலபமாக வழங்கி விடவில்லை.

1922ல் எழுதப்பட்ட “எங்கள் தேசிய வாழ்க்கையில் பெண்களுக்கான இடம்” என்ற கட்டுரையில் வாக்குரிமைக் காகப் போராடும் பெண்களைப் பார்த்து ஆண்கள் ஓர் சொற்றொடரை அடிக்கடி பாவிப்பது வழக்கமாயிற்று. “அன்புக்குரிய பெண்கள் வீட்டு வேலையை விட்டு விட்டு ஏன் வாக்கு போட போக வேண்டும்” என்ற கேள்வி பலராலும் எழுப்பப்பட்டது. மறுபுறம் பொன்னம்பலம்

**(21 ஆம்பக்கம் பார்க்கவும்)**



-நிமிர்வின் பார்வை-

# தமிழ்மக்கள் பேரவையின் எதிர்காலம்

2015 ஆம் ஆண்டு தமிழ் மக்களின் ஆதரவுடன் தெற்கில் மலர்ந்த அரசாங்கம் இனப்பிரச்சனைக்குத் தீர்வாக புதிய யாப்பு ஒன்றை உருவாக்க முனைந்தது. இந்த முயற்சியில் தமிழ் தேசிய கூட்டமைப்பும் பங்காளராக இணைந்து கொண்டது. அரசியல் கட்சிகள் என்ற வகையில் யாப்புருவாக்கத்தில் பங்கு பற்றிய கட்சிகள் தமது அரசியல் பேரங்களையும் யாப்புருவாக்க முயற்சிகளையும் ஒன்றாகக் கலக்க முற்பட்டன. புதிய யாப்பில் இனப்பிரச்சனைத் தீர்வுக்கு அடிப்படையாக இருக்க வேண்டிய அம்சங்களை முதன்மைப்படுத்துதல் கைவிடப்பட்டது. புதிய யாப்பில் தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதாக தோற்றம் ஏற்படுமானால் பதவிக்கு வந்த மைத்திரி–ரணில் அரசாங்கம் தொடர்ந்து பதவியில் இருக்க முடியாது என்ற அரசியல் காரணிகள் முதன்மைப்படுத்தப்பட்டன. தெற்கில் மீண்டும் மகிந்த பதவிக்கு வருவதைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கம் முதன்மைப்படுத்தப்பட்டது. சிங்கள இனவாதத்திற்கு பயந்த நிலையிலேயே யாப்புரு வாக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த அடிப் படையை புரிந்தோ புரியாமலோ தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பும் இந்த முயற்சிகளில் இணங்கிப் போகும் தன்மை காணப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை யில் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் யாப்புருவாக்க முயற்சிகளில் தமிழரும் கலந்து கொள்ள கிடைத்த முதலாவது வாய்ப்பாக இதனைக் கருதினர். இந்தச் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் அபிலாசைகளை யாப்பில் இடம்பெற வைக்க முடியும் என மனதார நம்பினர். இவர்களை இந்த முயற்சியில் ஈடுபடுமாறு சர்வதேச அரசாங்கங்களும் நிர்ப்பந்தித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சர்வதேச அரசாங் கங்களும் சிங்கள இனவாதத்தை தெரிந்தோ தெரி யாமலோ குறைவாக மதிப்பிட்டு விட்டனர் போலும். புதிய யாப்பு முயற்சி சிங்கள இனவாதத்தை உசுப்பி விட்டது. மகிந்த வின் ஊழல்களை தாங்க முடியாமல் அவரைப் பதவியில் இருந்து நீக்கி மைத்திரி–ரணில் அரசாங்கத்தைப் பதவியில் அமர்த்திய சிங்கள மக்கள் மீண்டும் மகிந்தவின் பக்கம் சாயத் தொடங்கினர். இந்த மகிந்த பூச்சாண்டியால் புதிய யாப்பு முயற்சிகள் திசைமாறத் தொடங்கின.

## “தமிழ் மக்கள் பேரவையின் வரலாற்றுப் பாத்திரத்தை உணர்ந்து அதனுடன் சம்பந்தப் பட்ட அனைவரும் பொறுப்புணர்வுடன் கடமையாற்ற வேண்டிய தருணம் இது. வெறும் ஓய்வு நேர முயற்சியாக இதனைக் கருதாமல் வெகுஜன அமைப்பைப் பலப்படுத்த வேண்டிய தருணம் இது”

புதிய யாப்பில் தமிழ் மக்களுக்கு சமஷ்டிக்கு சமமான உரிமைகள் உள்ளன என தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களுக்குக் கூறியது. புதிய யாப்பில் நாம் ஒற்றையாட்சியை மேலும் பலப்படுத்தி இருக்கி றோம் என மைத்திரி–ரணில் அரசு சிங்கள மக்களுக்குக் கூறியது. தமிழ் மக்களுக்கு புலியின் தலையையும் சிங்கள மக்களுக்கு பூனையின் வாலையும் காட்டும் முயற்சி வெளிப் படையாகவே நடந்தது.

இவ்வாறாக இரு சமூக மக்களையும் ஏமாற்றும் இந்த அரசியல் நாடகத்தின் மத்தியில் இனப்பிரச்சனைக் குத் தீர்வாக தமிழர் வேண்டுவது என்ன என்பதை எல்லா அரசியல் கட்சிகளுக்கும் உரத்துச் சொல்ல வேண்டிய தேவை எழுந்தது. அரசியல் கட்சிகள் ஆட்சியதிகாரத்தைத் தக்க வைப்பதற்கு புதிய யாப்பு முயற்சியைப் பலிக்கடா ஆக்கிய நிலையில் இந்தக் குரல் ஓர் அரசியல் கட்சியிட மிருந்து வராமல் பொது மக்கள் தரப்பிலிருந்து வரவேண்டும் என்ற தேவை உணரப்பட்டது.

இவ்வாறான பின்னணியிலேயே தமிழ் மக்கள் பேரவை 2016 ஆம் ஆண்டு உதயமானது. தமிழ் மக்கள் மத்தியிலிருந்த அரசியல் ஆர்வலர்கள் வடமாகாண

முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனுடன் சேர்ந்து இதனை ஆரம்பித்தனர். எந்த ஒரு கட்டத்திலும் இது ஓர் அரசியல் கட்சியாக மாற்றமடையாது என்ற கோட்பாட்டுடன் இது ஆரம்பித்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (சுரேஸ் அணி), தமிழ் ஈழ மக்கள் விடுதலை இயக்கம் ஆகிய அரசியல் கட்சிகள் தமிழ் மக்கள் பேரவையில் இணைந்து செயலாற்றத் தொடங்கின. தமிழ் அரசுக் கட்சித் தலைவர்கள் தமிழ் மக்கள் பேரவையின் உருவாக் கத்துக்கும் அது மேற்கொண்ட "எழுக தமிழ்" போன்ற நிகழ்வுகளுக்கும் எதிர்ப்பை வெளியிட்டனர் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் பேரவை ஓர் அரசியல் கட்சியாக இல்லாமல் வெகுஜன அமைப்பாக செயலாற்றும் என்ற வகையில் தமிழர் பகுதிகளில் ஏற்கனவே இயங்கி வந்த தொழில் சங்கங்களும் சிவில் சமூக அமைப்புக்களும் தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து செயலாற்ற முன்வந்தன. வடக்கிலும் பின்னர் கிழக்கிலும் "எழுக தமிழ்" நிகழ்வுகளைப் பலதரப்பினரின் ஒற்றுமையுடன் பேரவை வெற்றிகரமாக நடத்தியது. இவ்வாறாக தமிழர் தரப்பின் பல்வேறு தரப்புக்களையும் பின்னணிகளையும் கொண்ட வெகுஜன இயக்கமாக தமிழ் மக்கள் பேரவை பரிண மித்தது.

புதிய யாப்பு முயற்சிகளில் தமிழர் வேண்டுவ தென்ன என்பதை அரசியல் கட்சிகளுக்கும் சர்வதேசத் துக்கும் வெகுஜனத்தின் குரலாக எடுத்துச் சொல்லும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க அமைப்பாக தமிழ் மக்கள் பேரவை தோற்றம் பெற்றது. இந்த அமைப்பைத் தோற்று வித்த தலைவர்கள் ஆரம்பத்தில் இந்த வரலாற்றுக் கடமையின் தார்ப்பரியத்தை உணர்ந்தவர்களாகவே காணப்பட்டனர். ஆயினும் இத்தலைவர்களில் முதலமைச் சர் உள்ளிட்ட எல்லோரும் தமது தொழில்சார் துறைகளில் முன்னணியில் இருப்பவர்கள். இவர்களுக்கு ஒரு வெகுஜன அமைப்பைக் கட்டுவதில் முன் அனுபவம் இருக்கவில்லை. அமைப்பைக் கட்டுவதற்கு செலவழிக்க கிடைத்த நேரமும் குறைவு. இதனால் நேரம் கிடைத்தவர்கள் தமது தனிமனித ஆளுமைகளைப் பயன்படுத்தியும் தன்னிச்சையாகவும் அமைப்பைக் கட்டுவதில் ஈடுபட்டனர்.

இதில் நகைப்புக்கிடமானது என்னவெனில், புதிய யாப்பில் இடம்பெற வேண்டியது என்னவென வலியுறுத்த ஆரம்பித்த அமைப்பு தனது செயற்பாடுகளை நெறிப் படுத்த ஒரு யாப்பை உருவாக்க தவறி விட்டது. தமிழ் மக்கள் பேரவை ஆரம்பித்த நாளில் இருந்து கணிசமான காலம் வரை இதற்கென ஓர் அலுவலகம் இருக்கவில்லை. இவ்வாறான குறைபாடுகள் பலராலும் பலமுறை சுட்டிக் காட்டப்பட்ட போதும் அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக் கைகள் எடுக்கப்படவில்லை. தமிழ் மக்கள் பேரவையின் தலைமை வெகுஜன அமைப்பு தானாக வளர்ந்து விடும் என எதிர்பார்த்தது. அவர்களால் போதிய நேரத்தை இதற்கு ஒதுக்க முடியாத நிலையில் அமைப்பு கட்டும் செயற் பாடுகள் அவர்களின் ஓய்வு நேர முயற்சியாக வரும் நிலை ஏற்பட்டது.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கனடாவின் TET தொலைக் காட்சிக்கு 2018 தை மாதத்தில் அளித்த பேட்டியில் தமிழ் மக்கள் பேரவையின் "எழுக தமிழ்" போன்ற நடவடிக் கைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட முடியுமா என்று கேட்ட பொழுது, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பைப் பொறுத்த வரை அரசாங்கத்துடன் இணைந்து புதிய யாப்பு தொடர்பாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் அதே சமயத்தில் அரசாங்கத்தின் போக்குக்கு எதிர்ப்பைக் காட்டுவது கடினமாக இருக்கும் எனக் கூறினார். அவ்வாறான முயற்சிகளைக் கூட்டமைப்பு செய்யாமல் ஏனைய அமைப்பு ஒன்று செய்வதே சாத்தியமான தாக இருக்கும். பயனுள்ளதாகவும் இருக்கும். அரசாங்கத் துடன் பேச்சுவார்த்தை மேசையில் அமரும் பொழுது "எழுக தமிழ்" போன்ற நடவடிக்கைகள் கூட்டமைப்புக் கும் தமிழர் தரப்பிலிருந்து அழுத்தம் இருக்கிறது என்பதை அரசாங்கத்துக்கு உணர்த்தப் பயன்படுகின்றன. எவ்வாறு சிங்களத் தீவிரவாதிகளால் தமக்கு அழுத்தம் இருக்கிறதோ அவ்வாறே தமிழ் தீவிரவாதிகளால் கூட்டமைப்புக்கும் அழுத்தம் இருக்கிறது என்று அவர்கள் உணர்கிறார்கள். அதேவேளை இவ்வாறான நிகழ்வுகள் தமிழ் தீவிரவாதத்தை தூண்டாமல் பார்த்துக் கொள்வது அவசியம். அது சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தைத் தூண்டும் சக்திகளுக்கு வாய்ப்பாகப் போய்விடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் இந்தப் பதில் தமிழ் மக்களின் உரிமைக்கான போரில் தமிழ் மக்கள் பேரவையின் பங்கை மிகவும் தெளிவாகவும் அழுத்த மாகவும் முன்வைக்கிறது. அதாவது அரசியல் கட்சி களுக்கு உள்ள சில கைவிலங்குகள் வெகுஜன அமைப் புகளுக்கு இல்லை என்பதை அவரது பதில் எடுத்து ரைக்கிறது. தமிழ் மக்கள் பேரவையின் நடவடிக்கை களை பல தடவைகள் கடுமையாக கண்டித்த சுமந்திரனே தமிழ் மக்கள் பேரவையின் இருப்பின் அவசியத்தை உணர்ந்து இருக்கிறார். ஆகவே தமிழ் மக்கள் பேரவையின் வரலாற்றுப் பாத்திரத்தை உணர்ந்து அதனுடன் சம்பந்தப் பட்ட அனைவரும் பொறுப்புணர்வுடன் கடமையாற்ற வேண்டிய தருணம் இது. வெறும் ஓய்வு நேர முயற்சியாக இதனைக் கருதாமல் வெகுஜன அமைப்பைப் பலப்படுத்த வேண்டிய தருணம் இது.

இங்கே முக்கியமாக குறிப்பிட வேண்டியது. தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் அமைப்பு. ஒரு மக்கள் அமைப்பில் ஜனநாயக கட்டுமானங்களும் ஜனநாயக செயற்பாடுகளும் இருப்பது அவசியம். ஆனால் தமிழ் மக்கள் பேரவையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் ஒரு கட்டுக்கோப்பான நிறுவன ரீதியாகவோ ஜனநாயக

நடைமுறைகளூடாகவோ எடுக்கப்படுவதாக தெரிய வில்லை. உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு தமிழ் மக்கள் பேரவையின் பங்காளிக் கட்சிகளான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் இணைந்து செயற்படவிழைந்தன. அதற்கு தமிழ் மக்கள் பேரவை பின்னிருந்து ஆதரவளிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தன. தமிழ் மக்களின் அன்றாட வாழ்வியலுடன் சம்பந்தப்பட்ட இத்தேர்தலில் ஒரு தலைமையை வழங்கக் கூடிய சந்தர்ப்பம் தமிழ் மக்கள் பேரவைக்கு இருந்தது. தமிழ் மக்கள் பேரவை தலைமைக் குழுவில் இருந்த பலருக்கு இதில் உடன்பாடு இருந்தது. ஒரு நிறுவனப்படுத்தப்பட்ட ஜனநாயக ரீதியான முடிவெடுக்கும் முறைமைகள் அங்கு நிறுவப் படாமல் இருந்ததால் இறுதியில் முதல்வர் விக்னேஸ்வரனின் கருத்தே இறுதி முடிவானது. இதனால் நடுவிலிருந்து பேரம் பேசக்கூடிய தலைமை இல்லாமையால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் இணைந்து செயற்பட முடியாமல் பிரிந்தன. தமிழ் மக்களின் வாக்குகள் சிதறின.

இந்த வரலாற்று முக்கியம் மிக்க சமயத்தில் தமிழ் மக்கள் பேரவையின் நிறுவனமயப்படுத்தலில் இருந்த குறைபாடுகள் காரணமாக முடிவெடுப்பதில் ஏற்பட்ட குழப்பங்களால் பேரவையின் செல்வாக்கு சரியத் தொடங்கியது. உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் நடந்த தமிழ் மக்கள் பேரவை கூட்டத்திலும் முதல்வர் விக்னேஸ்வரன் தமது அபிமானத்துக்கு உரியவர்களை அழைத்து வந்து அவர்களைப் பேரவையில் இணைத்துக் கொள்ளுமாறு கோரினார். ஒரு வெகுஜன அமைப்பில் சேருவதற்கு எல்லாருக்குமே உரிமை உண்டு. ஆனால் ஒரு வெகுஜன அமைப்பில் அங்கத்தவர்களை இணைப்பதற்கும் நீக்குவதற்கும் நிறுவனமயப்பட்ட செயற்பாடுகள் வரையறுக் கப்பட்டு இருக்க வேண்டும். குறைந்தபட்சம் தலைமைக் குழுவில் இருந்தவர்கள் பலருடனாவது கலந்துரையாடிய தாக இருக்க வேண்டும். தன்னிச்சையானதாக இருக்கக் கூடாது.

தமிழ் மக்கள் பேரவையில் முடிவெடுப்பதில் தனி நபர் ஆளுமைகள் ஆதிக்கம் செலுத்துவது தவிர்க்கப்பட வேண்டும். இது பேரவையில் உள்ள பலரையும் அதிருப் திக்கு உள்ளாக்கியுள்ளதை உணர வேண்டிய தருணம் இது. இது தொடருமானால் பேரவையின் அழிவுக்கே வழிவகுக்கும். முக்கியமாக பெயரளவில் மக்கள் அமைப் பாக இருக்காமல் அதற்கான யாப்பையும் நிறுவனமயப்பட்ட ஜனநாயக கட்டமைப்பையும் வேலைத்திட்டங்களையும் வகுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வு, நடந்து முடிந்த இனப்படுகொலைக்கு இலங்கையை பொறுப்புக் கூற வைத்தல் ஆகிய விடயங்களையும் தாண்டி தமிழர் தாயகத்தில் உடனடியாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்களும் ஏராளம் உள்ளன. காணாமல் போனவர்களைக் கண்டு பிடிப்பதற்கான போராட்டம், அரசியல் கைதிகளின் விடுதலைக்கான போராட்டம், காணிவிடுவிப்பிற்கான போராட்டம் என்பனவற்றுக்கு தமிழ் மக்கள் பேரவை தலைமை தாங்க வேண்டும். இத் தலைமையின் ஊடாக அரசியல் கட்சிகளுக்கு இப்பிரச்சனைகளைத் தீர்க்கச் சொல்லி அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

எங்களிடம் ஒரு சிந்தனையாளர் குழாம் (Think Tank) இல்லாத குறையை இன்று தமிழினம் கடுமையாக எதிர்கொள்கிறது. தமிழ்மக்கள் பேரவை ஆலமரமாக வளர்ந்து கிளை பரப்பியிருந்தால் தமிழ்மக்களின் அத்தனை பிரச்சினைகளையும் அது லாவகமாக கையாண்டிருக்க முடியும். சிந்தனையாளர் குழாம் ஏற்கனவே தமிழ்மக்கள் பேரவையிடம் உள்ளது. ஆனால் அது செயற்திறனின்றி உள்ளமை கவலையளிக்கிறது. கல்வி, பொருளாதாரம், அபிவிருத்தி, இயற்கை விவசாயம் உள்ளிட்ட பல துறைகளில் எம்மக்கள் பின்தங்கியே நிற்கிறார்கள்.

தமிழ் மக்கள் பேரவையின் தலைவர்களும் ஆளுமைப் பொறுப்பில் உள்ளவர்களுக்கும் இந்த அமைப்பின் வளர்ச்சிக்கு அதிக நேரம் ஒதுக்க முடியாத நிலை இருக்குமானால் அவர்கள் தமது பதவிகளுக் கும் பொறுப்புகளுக்கும் ஏனையவரை நியமிக்க முயற்சி எடுக்க வேண்டும். அப்பதவிகளையும் பொறுப்புகளை யும் கையேற்க ஒருவரும் முன்வராத நிலை நிலவு மானால் தமிழ் மக்கள் பேரவையைக் கலைப்பதற்கு கூட தயங்கக் கூடாது. ஏனெனில் செயற்படாத ஓர் அமைப்பை வைத்திருந்து தமிழ் மக்களை ஏமாற்றத்துக்கு உள்ளாக்கு வதை விடுத்து இயலாமையை ஒத்துக் கொண்டு விலகு வதே தர்மம் ஆகும்.

அவ்வாறு தமிழ் மக்கள் பேரவை கலைக்கப்படும் பட்சத்தில் அது நிறைவேற்ற நினைக்கும் வரலாற்றுப் பாத்திரத்தை யார் பொறுப்பேற்பது என்ற கேள்வி எழலாம். “வரலாறு வெற்றிடங்களை விடுவதில்லை” என்று சொல்லப் படுவதுண்டு. தமிழ் மக்கள் பேரவைக்கென வரலாற்றுப் பாத்திரம் உள்ளதால் அது இல்லாதவிடத்து இன்னொரு செயற்திறனுள்ள அமைப்பு அதன் இடத்தை நிரப்ப உரு வாகும். அது வரலாற்று நியதி. ஆகவே செயற்படாமல் இருந்து கொண்டு வழியை மறித்துக் கொண்டிருப்பதை விடுத்து ஒதுங்கி வழி விடுவதே தமிழ் மக்களுக்கு செய்யக் கூடிய நன்மையாகும்.

தெற்கில் ஊழலையும் பொருளாதாரப் பிரச்சனைகளாலும் உட்கட்சிச் சண்டைகளாலும் மைத்திரி –ரணில் அரசாங்கம் சிறிது சிறிதாக பலமிழந்து கொண்டிருக்கிறது. நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தல்

**(13 ஆம்பக்கம் பார்க்கவும்)**

# மகளிர் மேம்பாட்டில் சவால்களும் சாதனைகளும்




-செல்வநாயகம் ரவிசாந்-

"மகளிர் உரிமைகளின் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு தொடர்பான வேலைப்பாடுகள், செயற்பாடு கள் என்பனவற்றிற்கும் ஒரு முடிவே இல்லையா? மீண்டும் மீண்டும் ஒரே நிகழ்வுகளையும், செயல் திட்டங்களையும் செய்து கொண்டிருக்கின்றோமே! பலரின் முறைப்பாடு இது. நிச்சயமாக இதுவொரு முடிவு றாப் பயணம் தான். ஆனால், அடைவுகளும் நிச்சய மாகப் பூச்சியமில்லை" என திருமதி காயத்திரி குமரன் தெரிவித்துள்ளார். இவர் ஐக்கியநாடுகள் வதிவிடப் பிரதிநிதி அலுவலக கள ஒருங்கிணைவு உத்தியோகத் தராக கடமையாற்றுகிறார்.

யாழ். மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் 2018 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டிய விழிப்புணர்வு நிகழ்வுகள் பங்குனி 08 ஆம் திகதி யாழ். உடுவிலில் சிறப்பாக இடம்பெற்றன. "வலுவான பெண் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கிறாள்" எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற குறித்த நிகழ்வு யூ.என்.எச்.சீ.ஆர் நிறுவனம் மற்றும் யாழ். சமூக செயற்பாட்டு மையம் ஆகியவற்றின் நிதிப் பங்களிப்பில் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு "மகளிர் மேம்பாடு! சவால் களும் சாதனைகளும்" எனும் தலைப்பில் கருத்துரை யாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். பால்நிலை சமத்துவத்தை எட்டுவதற்கும், பெண்களை வலுவூட்டுவதற்குமான எமது செயற்பாடுகள் முடிவு றாதவை. இவ்வாறாக சர்வதேச மகளிர் தினத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு செயற் பாட்டின் அடைவுகளும் வெற்றிகரமானவையே. முன்னேற்றகரமான பாதையில் மகளிர் மேம்பாடு பயணித்துக் கொண்டிருக்கின்றது.

இன்றைய உலகின் யதார்த்தமாகவும் இதுவே காணப்படுகின்றது. நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையுமாய் எங்கள் பெண்கள் வீட்டிலிருந்து பொதுவெளிக்கு வந்து புதுமைகள் படைப்பதற்கான சந்தர்ப்பங்களும், வாய்ப்புக்களும், அங்கீகாரங்களும் இன்றைய உலகில் மிகக் காத்திரமாகவே கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

இன்றைய கல்விச் சூழலில் பெண்களின் கால்த்தடம் மிகத் திடமாகவே இருக்கிறது. இலங்கையைப் பொறுத்தவரை ஆண், பெண் பேதமின்றி அனைத்துச் சிறுவர்களுக்குமான தரமான கல்வியும், சமமான தொழில் வாய்ப்புக்களும் கிடைத்துக் கொண்டு தான் இருக் கின்றன. அதேபோன்று அனைத்துத் தொழில் துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு மிகவும் காத்திரமானதாக இருந்து கொண்டிருக்கின்றது.

அரச, தனியார் சேவை வழங்கலில் எவ்வித பாகுபாடோ, பின்னடைவோ இன்றி மகளிர் மேம்பாட்டு நலத் திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இருந்த போதிலும் பெண்கள் முன்னேற்றப் பயணத்தில் எதிர்நோக்குகின்ற தடங்கல்கள், முட்டுக் கட்டைகள் என்பன தொடர்பில் நாங்கள் சிந்திப் போமானால் அது எங்கள் ஒவ்வொருவருடைய மனங்கள் தான். இதனை நீங்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்வீர்கள் என நினைக்கின்றேன்.

பாலியல் வன்முறைச் சம்பவங்களுக்கு அடிப் படைக் காரணம் எங்கள் ஒவ்வொருவருடைய மனத்திலும்




**“சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் பல்வேறுபட்ட நிலைகளில் தொடர்ச்சியாக வேலை செய்து கூட்டாகச் சமூகப் பொறுப்புணர்ச்சியை கட்டியெழுப்பினால் மாத்திரமே எதிர்காலத்தில் மொத்த சமூகத்திலும் வலுவான மகளிர் மேம்பாட்டை நாங்கள் எதிர்பார்க்கலாம்”**

உள்ள பால்நிலை சம்பந்தமான விம்பங்களே. ஆண்களும், பெண்களும் அவ்வாறானதொரு விம்பத்தை மனங்களில் வைத்திருப்பது தான் அநேகமான பிரச்சினை களுக்கு மூலகாரணமாக அமைந்துள்ளது.

இது என்னால் முடியுமா? என்னால் இயலாது. நான் பலவீனமானவள். எனக்கு ஆற்றல்கள் குறைவு தானோ, நான் ஏனையவர்களில் தங்கித் தான் வாழவேண்டுமோ? போன்ற பலவீனமான மன ஓட்டங்களை ஆண், பெண் எல்லோரும் வாழ்க்கையின் ஏதோவொரு கால கட்டத்தில் எதிர்நோக்கியவர்களாகவே இருப்போம். ஆனால், இவ்வாறான பலவீனமான மன ஓட்டங்களை கண நேரத்தில் கடந்து வருபவர்கள் வெற்றியாளர் களாகவும், அந்தப் பலவீனமான மன ஓட்டங்களுடன் தங்கியிருப்பவர்கள் தடுமாற்றத்தைச் சந்திப்பவர் களாகவும் காணப்படுகின்றார்கள். ஆனால், துரதிஷ்ட வசமாக இந்தத் தடுமாறுவோர் கூட்டத்தில் பெண்களின் சதவீதம் சற்று அதிகமாகவே உள்ளது.

எதிர்மறையான எண்ணச் சூழல்கள் சுற்றி யுள்ளோராலும் உருவாக்கப்படுகின்றன. ஒருவரைப் பார்த்து ஐயோ... உங்களுக்கு ஏதோ வருத்தம் போலிருக்கிறது... உடல் மெலிவாகவிருக்கிறது, களைப் பாகவிருக்கிறது என நான்கைந்து பேர் தொடர்ச்சியாக கூறினால் சுகதேகியாகவுள்ள ஒருவரும் வைத்திய சாலைக்குச் சென்று வைத்தியப் பரிசோதனை மேற் கொள்ள வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்படுவார்.

இந்த வருடத்துக்கான ஐக்கியநாடுகள் சபையின் தொனிப் பொருளாக “இது தான் நேரம்” அமைந்துள்ளது. கிராமம், நகரம் ஆகியவற்றிலுள்ள அனைத்துச் செயற் பாட்டாளர்களும் இணைந்து பெண்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவோம்! தன்னலம் கருதாது பொதுநலமே நோக்காகக் கொண்டு பெண்களின் வாழ் வியலை முன்னேற்றப் பாடுபடும் அனைவருமே செயற் பாட்டாளர்கள் தான்.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் ஐந்தாவது இலக்கு பால்நிலை சமத்துவத்தை எட்டுவதை யும், பெண்களை வலுவூட்டுவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இப்படிப்பட்ட குறிக்கோளை நோக்கித் தொடர்ச்சியாக அயராது போராடி வரும் அனைத்துச் செயற்பாட்டாளர்களும் போற்றப்பட வேண்டியவர்களே. இன்றைய நாளில் கொண்டாடப்பட வேண்டியவர்களே.

தொழிலாளர் சம்பந்தமான உரிமைகள், ஊதியத் திலுள்ள பாகுபாடுகள் என்பன மிகப் பாரிய பிரச்சினை யாகக் காணப்படுகின்றன. இதனை விட முடிவெடுக்கும் துறைகளில் மற்றும் அரசியல் உள்ளிட்ட துறைகளில் பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே காணப்படு கின்றது. யாழ்.மாவட்டத்தில் பல உயரதிகாரிகளாகப் பெண்கள் விளங்குகிறார்கள். ஆசிரியத் தொழிலைப் பொறுத்தவரை 80 வீதமானவர்கள் பெண்களாக விளங்கிய போதிலும் 20 வீதத்திற்கும் குறைவான பெண் அதிபர்களின் பங்களிப்பே காணப்படுகிறது. இதற்கு என்ன காரணமென நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

சட்டப் பாதுகாப்பு மற்றும் சட்ட உதவிகள் காணப்பட்ட போதும் ஒட்டுமொத்தமான மகளிர் மேம் பாட்டிற்குச் சட்டமும், சட்ட உதவிகளும் எங்களுக்கு எவ்வாறான உடனடிப் பங்களிப்பை வழங்குகின்றன என்பது கேள்விக்குறியான ஒன்றாகும். அதேநேரம் பெண்களின் ஆரோக்கியம், சுகாதாரம் தொடர்பான நிலைமைகளும் முக்கியமான பிரச்சினைகளாகவே உள்ளன. இவ்வாறான பிரச்சினைகளையும், சவால்களை யும் எவ்வாறு நாங்கள் இனம் கண்டு கொள்ளலாம்?இது தொடர்பான சேவை மற்றும் உதவி வழங்கல்கள் பாதிக் கப்பட்ட பெண்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்பட்டே வருகின்றன. சேவைகளின் தரத்தை வேண்டுமானால் நாங்கள் மேம்படுத்தலாம். அதேபோன்று உதவிகளின் பெறுமதி மற்றும் உடனடித் தன்மை போன்றவற்றையும் நாங்கள் மேம்படுத்தலாம். ஆனால், இவைமட்டுமே மகளிர் மேம்பாடு அல்ல.

பாதிக்கப்பட்ட, நலிவுற்ற மக்களுக்கான வேலைத் திட்டங்கள் மட்டும் ஒட்டு மொத்த சமூகத்தின் மகளிர்

மேம்பாட்டிற்கு முற்றுமுழுதாகப் பங்களிக்கும் என நாங்கள் கூறிவிடமுடியாது. எதிர்வரும் காலங்களில் பாதிப்புக்குள்ளாகும் நிலைமை குறைவடையும் எனவும் எங்களால் சொல்லிவிட முடியாது. சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் பல்வேறுபட்ட நிலைகளில் தொடர்ச்சியாக வேலை செய்து கூட்டாகச் சமூகப் பொறுப்புணர்ச்சியை கட்டியெழுப்பினால் மாத்திரமே எதிர்காலத்தில் மொத்த சமூகத்திலும் வலுவான மகளிர் மேம்பாட்டை நாங்கள் எதிர்பார்க்கலாம். இவ்வாறாக திருமதி காயத்திரி குமரன் தெரிவித்தார்.

**பாதிக்கப்பட்ட பெண்கள் முறைப்பாடுகள் செய்ய முன்வருவது அவசியம்**

வன்முறைகளை மறைக்கும் வகையில் பெண்கள் செயற்படுவதால் வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் தொடர்ந்தும் வன்முறைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இவ்வாறான பாதிப்புக்கள் தொடராமலிருக்க வேண்டு மாயின் பாதிக்கப்பட்ட பெண்கள் முறைப்பாடுகள் செய்ய முன்வருவது அவசியம் என யாழ். பிராந்திய பெண் உப பொலிஸ் பரிசோதகர் திருமதி சிந்துபாமினி இந்த நிகழ்வில் வலியுறுத்தியுள்ளார். “பெண்களுக்கான பாதுகாப்பும் சட்ட நடவடிக்கைகளும்” எனும் தலைப்பில் கருத்துரை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பெண்கள் சமூகத்தில் தனியாக வாழ முடியாத நிலைமை இன்று காணப்படுகின்றது. சமூகமும், குடும்பமும் ஒன்றிணைந்தால் தான் பெண்களால் சமூகத் தில் மகிழ்ச்சியாக வாழ முடியும். எனவே, பெண்களின் மகிழ்வான வாழ்விற்கு வன்முறையற்றதொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவது அவசியம்.

அண்மைக்காலமாகப் பெண்களுக்கெதிரான வன் முறைகள் அதிகரித்து வருகின்றன. வன்முறைகள் குறை வடைந்து கொண்டிருக்கின்றன என நாங்களனைவரும் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். பொலிஸ் நிலையங் களிற்கு வரும் முறைப்பாடுகள் குறைவாகவிருந்தாலும் மறைக்கப்படும் முறைப்பாடுகள் அதிகமாகவேயுள்ளன. எங்கள் கண்களுக்குத் தெரியாத பல பிரச்சினைகள் கிராமங்களில் தினமும் நடந்து கொண்டிருக்கின்றன.

பெண்கள் பெரும்பாலும் தமக்கெதிராக மேற் கொள்ளப்படும் வன்முறைகளுக்கெதிராக முறைப்பாடு செய்வதற்கு அச்சப்படுகிறார்கள். கணவர் என்ற முறை யிலோ அல்லது தந்தை என்ற முறையிலோ ஏனையவர் களில் தங்கி வாழ வேண்டிய நிலைமை காணப்படுவதும் மற்றைய காரணம். இந்த இரண்டு காரணங்களாலும் பல வன்முறைகள் மறைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

வன்முறையில் ஈடுபடுபவர்கள் சிறுவயதில் வன்முறைகளுக்கு ஆளானவர்களாகக் காணப்படுகிறார் கள். ஒரு குடும்பத்தில் தந்தை தனது மகளையோ அல்லது ஒரு கணவர் தனது மனைவியையோ வன்முறைக்கு உள்ளாக்குபவராகவிருந்தால் அவர்கள் சிறுவயதில் ஏதோவொரு வகையில் வன்முறைகளுக்கு ஆளான வர்களாகவே காணப்படுவார்கள். எனவே, ஒரு பிள்ளை யைச் சரியான வகையில் வளர்த்தோமாயின் எதிர்காலத் தில் சமூகத்திலிருந்து வன்முறைகளை நாங்கள் குறைக்க முடியும்.

தற்போது 14 தொடக்கம் 16 வரையான இளம் சிறுவர்கள் பலவிதமான வன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். ஆனால், பெற்றோர்கள் அதனைக் கண்டிப் பதில்லை. நான் ஒரு கிராமத்துக்குச் சென்ற போது நான்கு சிறுவர்கள் பீடி குடித்துக் கொண்டிருந்தார்கள். பீடி குடிப்பதற்கு முன்னர் அந்த நான்கு சிறுவர்களும் ஒரு உணவகத்தில் கொத்து றொட்டி சாப்பிட்டதாக அறிந்தேன். குறித்த சிறுவர்களின் ஒரு வீட்டிற்குச் சென்று இது தொடர்பில் நான் விசாரித்த போது அதற்கு அந்தச் சிறுவனின் தாயார் அவன் பிற்பகல் 3 மணிக்கு பள்ளிக் கூடத்தால வந்து பசியில்லையென நிற்கிறான் என்று கூறினார். பாடசாலையிலிருந்து வீட்டிற்குச் செல்வதற்குப் பத்து நிமிடங்கள் போதுமான நிலையில் நீங்கள் உங்கள் பிள்ளை ஒன்றரை மணித்தியாலமாக எங்கே சென்றான் என நீங்கள் ஏன் தெரிந்து கொள்ள முயலவில்லை எனக் கேட்டேன். பின்னரும் அந்தச் சிறுவன் தினமும் பாடசாலை முடிவடைந்து வீடு வரும் போது பற்றையான பகுதி யொன்றிலிருந்து பீடி குடிப்பதை வழக்கமாக்கிக் கொண்டமை தெரியவந்தது. ஆகவே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் அன்றாட நடவடிக்கைகள் தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் தவறான வழியில் சென்றுவிடக் கூடாது என்பதில் பெற்றோர்கள் கூடிய கரிசனை செலுத்துவது முக்கியம்.

பெண்களுக்கெதிரான, சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்த காரணத்தால் சட்டத்தில் பல திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. 1929 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சட்டம் பெண்களுக்கெதிரான வன்முறை அதிகரிப்பால் முதலாவது தடவையாக1995 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்டது. அதன் பின்னர் மேலும் வன்முறை அதிகரித்த காரணத்தால் 1998 ஆம் ஆண்டும், 2006 ஆம் ஆண்டும் இந்தச் சட்டம் திருத்தம் செய்யப்பட்டது. தற்போது 2018 ஆம் ஆண்டில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருந்தாலும் தற்போதுவரை 2006 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டமே நடைமுறையிலிருந்து வருகிறது.

தற்போது சட்டங்கள் வலுவானதாகவுள்ளது. இந்நிலையில் சட்டத்தை நாங்கள் நிறைவேற்ற வேண்டுமாயின் முறைப்பாடுகள் கிடைப்பது கட்டாய மாகும். பாலியல் துஸ்பிரயோகம் சட்டத்தின் 345 ஆம்

பிரிவின் கீழ் வருகிறது. முன்னர் உடலில் பாலியல் ரீதியாகத் தொட்டாலேயே அது துஸ்பிரயோகமாகக் கருதப்பட்டது. ஆனால், தற்போது அந்தச் சட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. ஒரு ஆபாச சொல்லைப் பயன்படுத்துவதும் பாலியல் ரீதியான குற்றத்திற் குள்ளேயே உள்ளடங்கும். ஒரு பெண் தனியே நடந்து சென்று கொண்டிருக்கும் போது பல இளைஞர்கள் சேர்ந்து விசில் அடிக்கும் போது அதுவொரு பாலியல் ரீதியான பாதிப்பினை ஏற்படுத்தினால் அது கூட பாலியல் துஸ்பிர யோகத்திற்குள்ளேயே உள்ளடங்கும்.

பஸ்ஸில் பயணிக்கும் போது பெரும்பாலும் பெண்கள் பாலியல் ரீதியான துஸ்பிரயோகங்களை அதிகம் எதிர்கொள்கிறார்கள். காலில் ஏறி மிதிப்பார்கள். அடிக்கடி உடல் ரீதியாக மோதுவார்கள். ஆனால், இது தொடர்பாக முறைப்பாடுகள் செய்ய எவருமே முன் வருவதில்லை. 2010 ஆம் ஆண்டு முதல் தற்போது வரையான காலகட்டத்தில் பஸ்ஸில் தனக்குப் பாலியல் ரீதியான தொல்லை மேற்கொள்ளப்பட்டதாக ஒரே யொரு முறைப்பாடே கிடைக்கப் பெற்றுள்ளது. நான் பஸ்ஸில் பயணித்தால் கூட இதேநிலைமை தான். ஆனால், நாங்கள் யாருமே துணிந்து முறைப்பாடு செய்ய முன்வருவதில்லை.

இவற்றை நாங்கள் மறைப்பதால் வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் தொடர்ந்தும் வன்முறைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இவ்வாறான பாதிப்புக்கள் தொடராமலி ருக்க வேண்டுமாயின் பாதிக்கப்பட்ட பெண்கள் முறைப் பாடுகள் செய்ய முன்வருவது அவசியம். சட்ட ரீதியாகச் சிலர் தண்டிக்கப்படும் போது தண்டனைக்கு அஞ்சி எதிர் காலத்தில் இவ்வாறான வன்முறைகளைக் குறைக்க முடியும்.

சிறுவர்–பெண்கள் பிரிவுகளில் பெண் உத்தி யோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டியது கட்டாயம் எனக் கூறப்பட்டாலும் வடமாகாணத்தில் தமிழ் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இல்லாமை பெரும் குறைபாடாக வுள்ளது. யாழ்.மாவட்டத்தில் தமிழ்மொழி பேசக் கூடிய நான்கு பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மாத்திரமே காணப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணம் பண்ணையில் சிறுவர்–பெண்கள் பிரிவின் நிலையம் அமைந்திருந்தாலும் யாழ். குடா நாட்டிலுள்ள அனைத்துப் பொலிஸ் பிரிவுகளிலும் சிறுவர், பெண்கள் பிரிவு காணப்படுகிறது. இந்தப் பிரிவு களில் வன்முறைகளுக்கு எதிராகவோ அல்லது குடும்பப் பிரச்சினைகள் தொடர்பாகவோ முறைப்பாடு செய்யலாம். ஆனால், காங்கேசன்துறையிலிருந்து கூட முறைப்பாடு செய்வதற்கு யாழ்ப்பாணம் வருகை தருகின்றார்கள்.

1994 ஆம் ஆண்டு இலங்கைப் பொலிஸில் சிறுவர்–பெண்கள் பிரிவு தனிப்பிரிவாக உருவாக்குவதற் குத் தீர்மானமெடுக்கப்பட்டது. இதன் பின்னர் 1998 ஆம் ஆண்டு சிறுவர்– பெண்கள் பிரிவு இலங்கையிலுள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் தனியான அலகாக உருவாக்கப்பட்டது. தற்போது இலங்கையின் 42 பிராந்தியங்களில் இந்தப் பிரிவு இயங்கி வருகிறது. கொழும்பு கிராண்ட்பாஸில் சிறுவர்– பெண்கள் பிரிவின் தலைமையகம் அமைந்துள்ளது.

அதுமாத்திரமன்றி 24 மணித்தியாலமும் கொழும்பிலுள்ள சிறுவர்–பெண்கள் பிரிவின் தலைமை யகத்தில் உங்கள் முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும். உங்கள் முறைப்பாடுகளை 011 2421117 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் தெரிவிக்க முடியும். அங்கு தமிழ் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களும் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இவ்வாறாக உப பொலிஸ் பரிசோதகர் திருமதி சிந்துபாமினி தெரிவித்தார்.

---

**(09 ஆம் பக்க தொடர்ச்சி)**

முடிவுகள் மகிந்த ராஜபக்சவின் எழுச்சியை காட்டு கின்றன. அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்கள இனவாதமும் மீண்டும் மேல் எழுந்துள்ளது. இந்த நிலையில் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் ஆட்சியைத் தங்க வைக்க மைத்திரி–ரணில் அரசாங்கம் சிங்கள இனவாதத்தை திருப்திப்படுத்த முற்படுவதைத் தவிர்க்க முடியாது. மகிந்த ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதை நோக்கமாக கொண்டு மேற்குலகமும் இந்தியாவும் மைத்திரி–ரணில் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளைத் தடுக்கப் போவதில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பும் இதற்கு இணங்கிப் போவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவர்.

அதேவேளை மைத்திரி–ரணில் அரசாங்கம் இதுவரை இனப்பிரச்சனையைத் தீர்க்கும் நோக்கில் புதிய யாப்பை உருவாக்குவதற்காக எடுத்த நடவடிக்கைகளை கிடப்பில் போடப்படும். இந்த நிலையில் புதிய யாப்பு முயற்சிகளை உயிருடன் வைத்திருப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மட்டும் நம்பியிருக்க முடியாது. அப்படியாக இருப்போமானால் அதில் பலியாகப் போவது தமிழ் மக்களின் அபிலாசைகளே. இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் பேரவை போன்ற அமைப்பு ஒன்று அரசி யல் வேறுபாடுகளைக் கடந்து தமிழ் மக்கள் தரப்பு நியாயத்தை சர்வதேசத்துக்கும் உரத்துச் சொல்ல வேண்டிய அவசியம் உள்ளது. தமிழ் மக்கள் பேரவையால் பிரேரிக்கப்பட்ட யாப்புக்கான முன்யோசனைகளை தொடர்ந்தும் தமிழ் மக்கள் மத்தியிலும் சர்வதேசத்துக்கும் பரப்ப வேண்டிய அவசியம் உள்ளது.

# இருப்பை உறுதி செய்கின்ற வரலாற்று ஆவணம்




தமிழாய்வு மையம் இலங்கை – பிரித்தானியா ஆதரவுடன் திரு.மு.திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய பூகோளவாதம் புதியதேசியவாதம் நூல் வெளியீடு 24.02.2018 சனிக்கிழமை மாலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடந்தது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வடக்கு முதலமைச்சர் விக்கினேஸ்வரன் பின்வருவனவற்றைத் தெரிவித்தார்.

இப் பிரபஞ்சம் உருவாகிய காலத்திலிருந்து இன்று வரை உலகளாவிய ரீதியில் நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகள், கலாசார தன்னிருப்புப் போராட்டங்கள், பூகோள அரசியல் மாற்றங்கள், உலகப் பொருளாதாரத்தின் மாறுபடுநிலை, காலனித்துவ ஆதிக்கம் அதன் மூலமான உலகமயமாக்கல் மற்றும் தற்கால அரசியல் எனப் பல விடயங்களையும் ஆராய்ந்து இந்நூலில் வெளிக் கொண்டுவரப்பட்டுள்ளன. இவ்வாறான நூல்கள் மென் மேலும் வெளிவர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

காலத்திற்குக் காலம் இலங்கையில் வரலாற்று நூல்கள் மாற்றி மாற்றி எழுதப்படுகின்றன. இதிகாச வரலாறுகளும் பழங்குடியினரின் இருப்புக்கள் மற்றும் மத வழிபாடுகள் பற்றிய பல தவறான விடயங்களை பல வரலாற்று நூல்கள் தாங்கி வருவதை அவதானிக்கலாம். இலங்கையின் பூர்வீகக் குடிகளைத் தமக்குப் பின்னரான வந்தேறுகுடிகளாக காட்சிப்படுத்துகின்ற நிகழ்வுகள் தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்டு வருகின்றன. இக் கால கட்டத்தில் இவ்வாறான நூல்கள் பரந்துபட்ட ஆய்வுகளுடன் உசாத்துணை நூல்களின் ஆதாரங்களுடனும் பூர்வீக கல்வெட்டு அடையாளங்களுடனும் வெளிவருவது காலம் கடந்தும் எமது இருப்பை உறுதி செய்கின்ற ஒரு வரலாற்று ஆவணமாகக் கொள்ளப்படலாம்.

ஆத்ம ஞானிகளின் கண்டம் என்று அழைக்கப் படும் பெரும் மதங்கள் தோன்றிய ஆசியா பின்பு உல கெங்கும் மதப்பரம்பலை ஏற்றுமதி செய்தது. அதே போன்று இந்தியாவில் கி.மு 6 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பௌத்தம் கி.மு 3 ஆம் நூற்றாண்டைத் தொடர்ந்து கிழக்கு, தென்கிழக்கு ஆசியா ஆகிய நாடுகளுக்குப் பரவியதாகக்கூறப்பட்டுள்ளது. இவ்வாறாக பௌத்த மதம் பரவிய காலத்தில் இலங்கையின் வடபகுதியிலும் பௌத்த மத தமிழ் மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் எடுத் துக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு வாழ்ந்த தமிழ் பௌத்தர் களின் சில அடையாளங்களையும் கல்வெட்டுக்களையும் இன்று அடையாளம் கண்டு அதற்கு தவறான ஒரு வியாக்கி யானத்தின் மூலம் சிங்கள மக்கள் இப் பகுதிகளில் முன்பு வாழ்ந்துள்ளார்கள் என கூறப்படுகின்றது. இது முற்றிலுந் தவறானது. இவ்வாறான தவறான கருத்துக்களைப் பரப்ப விடுவது இன அழிப்புக்கு ஒப்பானது.

பூகோளவாதம் என்பது வெறுமனே புவிப்பரப்புப் பற்றிய விடயம் மட்டுமல்ல. மாறாகப் புவியின் இருப் போடு தொடர்புபட்ட சூரியகுடும்ப அங்கங்களுடனான தொடர்பும் மற்றும் நட்சத்திரங்கள் பிரபஞ்சம் பற்றிய சிந்தனை அறிவுகளுடன் கூடியதே பூகோளவாதம் என்பதை படைப்பாளர் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறி யிருப்பது இவரின் தனிச் சிறப்பாகும். அவ்வாறான முழுமையான சிந்தனையுடன் அணுவையும் அகிலத்தை யுஞ் சேர்த்துப் பார்க்கின்ற ஒரு கண்ணோட்டத்தை இந் நூலில் காண்கின்றோம்.

மேலும் இன்றைய நூலில் புவிப்பரப்பில் காணப்படுகின்ற இயற்கை சார்ந்த அம்சங்களையும் மூலவளங்கள், தாவரங்கள், விலங்குயிரினங்களையும் பேணிப்பாதுகாப்பது இன்னோர் அம்சமாக எடுத்துக் காட்டப்பட்டதுடன் இயற்கைக்கும் ஏனைய ஜீவராசி களுக்கும் மனிதனுக்குமிடையே ஒரு சமநிலையை பேணுவதன் அவசியம் பற்றியும் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு பூமி பிரபஞ்சம் பூகோளவாதம் என்ற தலைப்புக்களின் கீழ் ஆராய்ந்த ஆசிரியர் இலங்கைத் தமிழர்களின் நிலை பற்றியும் மிகத் தெளிவாக ஆராய்ந்து குறிப்புக்களை வெளியிட்டுள்ளார். சமஷ்டி என்ற வடமொழிச் சொற்பிரயோகத்தால் விளைந்த வரலாற்று நகர்வுகளும் அதனையொட்டி தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களையும் அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

தம்மதீபக் கோட்பாட்டின் படி இலங்கைத்தீவு பௌத்த தர்மத்திற்கென புத்த பகவானால் தேர்ந்தெடுக்கப் பட்ட அல்லது ஆசி வழங்கப்பட்ட பூமி என்ற கருத் துருவம் மேலோங்க பௌத்த மதம் – சிங்கள மொழி – அரசு என்ற மூன்றும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து சிங்கள மேலாதிக்கத்தை உருவாக்கியமை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

கண்டிய சிங்களவர்கள் கரையோரச் சிங்களவர்களை விட உயர்ந்தவர்கள் எனவும் கரையோரச் சிங்களவர்கள் இரண்டாம் பட்சமானவர்கள் என்ற நிலைப்பாட்டில் கண்டியர்கள் இருந்த காலத்திலேயே S.W.R.D. பண்டாரநாயக்காவினால் சமஷ்டிக் கோரிக்கை முதன் முதலில் 1926ல் மொழியப்பட்டது. சிங்களத் தலைவர்களிடமிருந்து இவ்வாறு முன்மொழியப்பட்ட போது அவை பற்றி அக் காலத் தமிழ்த் தலைவர்கள் கண்டு கொள்ளாதது வருத்தத்திற்குரியது. அக் காலத்திலேயே தமிழ் மக்களின் இருப்புக்கான நிரந்தரத்தீர்வு ஒன்று கிட்டுவதற்கு வாய்ப்பான காலம் கனிந்த போதும் அதனைக் கருத்திற் கொள்ளாது பிரித்தானிய சாம்ராஜ்யத்திலும் மற்றும் கடல் கடந்த நாடுகளில் கல்வி சார் தொழில் வாய்ப்புக்களைத் தமிழ் மக்கள் பெறுவதற்கான சிந்தனைகளுக்குமே தமிழ்த் தலைவர்கள் முக்கியத்துவம் கொடுத்தனர்.

அதே போன்று தமிழ் மக்களின் எழுச்சி பெற்ற கல்வி கற்ற நடுத்தர வர்க்கம் இந்த மண்ணிலிருந்து வெளியேற வளமான மூளைசாலிகளைத் தமிழ் மண் இழக்க நேர்ந்தது. இதனால் தமிழ் மூளைசாலிகள் தமிழ்த் தேசியம் சார்ந்த சமூக சிந்தனையைக் கைக் கொள்ளாது உத்தியோகம் சார்ந்த திரவியம் தேடும் வழியை நோக்கி திசை திரும்பியதன் விளைவே இன்று எமது தேசியச் சிந்தனைகளில் காணப்படக்கூடிய பின்னடைவுகளாக இருக்கின்றன எனக்கூறப்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுய நிர்ணய உரிமை உண்டு என்ற ஒரு தீர்மானத்தை 1944 ஆம் ஆண்டில் முதன் முறையாக டாக்டர் S.A.விக்கிரமசிங்க நிறைவேற்றிய போதும் இந்தியாவுடன் இணைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக இலங்கை தேசிய காங்கிரஸ் இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டதன் வாயிலாக அது கைகூடாமல் போனது. வல்லபாய் பட்டேல் அவர்கள் இந்தியாவுடன் ஒன்று சேர்க்கப்படவேண்டிய நாடாக இலங்கையை அப்போது அடையாளங்காட்டி இருந்தார். இந்தியாவுக்கு சாதகமாகப் பேசிவந்த சிங்களத் தலைவர்கள் சுதந்திரம் கிடைத்ததும் மலையக மக்கள் பத்து இலட்சம் பேரின் குடியுரிமைகளைப் பறித்தனர். இந்தியாவைப் புறக்கணித்து பிரித்தானியாவுடன் கூடிய பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டனர்.

இதன் விளைவாகவே இந்தியாவிற்கு எதிரான இராணுவத் தளங்களை பிரித்தானியர் இலங்கையில் அமைக்க முடிந்ததுடன் தமிழருக்கெதிரான அரசியலமைப்புச் சட்டத்தினை சிங்களத் தலைவர்கள் பெற்றுக் கொள்வதற்கும் வழி வகுத்தது. அப்போது கூடத் தமிழ் தலைவர்கள் புவி சார் கண்ணோட்டத்தை அல்லது சிங்கள தலைவர்களுக்கும் மற்றும் பிரித்தானிய ஆட்சியாளர்

**"தமிழ் மூளைசாலிகள் தமிழ்த் தேசியம் சார்ந்த சமூக சிந்தனையைக் கைக்கொள்ளாது உத்தியோகம் சார்ந்த திரவியம் தேடும் வழியை நோக்கி திசை திரும்பியதன் விளைவே இன்று எமது தேசியச் சிந்தனைகளில் காணப்படக்கூடியபின்னடைவுகளாக இருக்கின்றன"**

களுக்கும் இடையேயான அரசியல் உள்நோக்கங்களைச் சந்தேகக்கண் கொண்டு நோக்காமை அவர்களின் கற்பனை நிறைந்த அரசியல் சிந்தனைகளையும் சிங்களத் தலைவர்களின் மதிநுட்பம் மிக்க அரசியல் நகர்வுகளையும் எடுத்துக் காட்டுவதற்கான சிறந்த உதாரணங்களாக இந் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மிகச் சிறந்த அறிவாளியாகிய பேராசிரியர் சி.சுந்தரலிங்கத்திடம் 'நீயே சிறந்த மதியூகி' என்றதும் அவர் தமிழர் தவிர்ந்த சிங்களவர் மட்டும் அமைச்சரவையை நியமிக்கும் வழிமுறைகளை டி.எஸ்.சேனாநாயக்காவிற்கு எடுத்துக் கூறியிருந்தமை இத் தருணத்தில் நினைவிற்கு வருகின்றது.

மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்ட நிலையில் திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம் விலகி சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்து 1949ம் ஆண்டில் சமஸ்டிக் கட்சி என்ற புதிய கட்சியைத் தொடங்கிய போதும் கண்டிச் சிங்களவர்களும் கரையோரச் சிங்களவர்களும் கைகோர்த்து தமிழ் மக்களை ஒடுக்கத்தொடங்கிய பின்புதான் தமிழ்த் தலைவர்களுக்கு சமஸ்டி முறை பற்றிய உண்மையான ஞானோதயம் தோன்றத் தொடங்கியது என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துள்ளார் ஆசிரியர்.

வெள்ளைக்காரர்கள் பிரித்து ஆள தமிழர்கள் பயன்பட்டார்கள் என்றும் தமிழர்களுக்கு அளவுக்கு அதிகமான சலுகைகள் வழங்கப்பட்டன என்றும் கூறி எம்மீது அநீதிகள் கட்டவிழ்க்கப்பட்டன. இவ்வாறு காலத்துக்கு காலம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் 1956ல் சிங்கள மொழி ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டமை, அதனைத் தொடர்ந்து தனி ஈழம் பற்றிய சிந்தனை உருவாகிய விதம், உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகள், இனவாரித் தரப்படுத்தல் என்ற பல விடயங்களையும் ஆராயத் தவறாத ஆசிரியர் 1983 கறுப்பு யூலை, இனித் தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற தந்தை செல்வநாயகத்தின் கூற்று, முள்ளிவாய்க்கால் தந்த பெருவலி தமிழ் இனத்துக்கு ஏற்பட்டிருக்கும் மனவலி ஆகிய அனைத்தையும் தொட்டுச் சென்று இறுதியாக இராஜபக்சக்களின் வழியில் அமைதியாகச் செல்லும் சிறிசேன என்ற தலைப்புடன் முடிவுக்குக் கொண்டுவந்திருக்கின்றார் ஆசிரியர். இவ்வாறான நூல்கள் இன்றைய காலத்தின் கட்டாயம்.

# கிழக்கு மக்களின் பூர்வீகமும் காணிப் பிரச்சினைகளும்





–சுந்தர்–

இலங்கையில் கிழக்கு மாகாணம் சமூக ரீதியில் பல பிரத்தியேகப் பண்புகளைக் கொண்டு விளங்குகின்றது. இம்மாகாணத்திலுள்ள திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சனைகளில் பல பொதுப் பண்புகள் நிறைந்து காணப்படுகின்றன. அவற்றுள் பிரதானமானது காணிப் பிரச்சனைகளாகும்.

வரலாற்றுப் போக்கில் பார்க்கும்போது ஓரளவுக் காவது நிரூபிக்கப்பட்ட தொல்லியல் சான்றுகளின்படி இம் மாகாண நிலப் பரப்புக்குள் வாழ்ந்து வந்த பிரதான மக்கட் தொகுதியினர் தமிழர்களேயாவர். ஆனால் நீண்ட வரலாற்று ஓட்டத்தில் மிகப் பிந்திய காலங்களில் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் இங்கு குடியேற்றப் பட்டனர். பல்வேறு முரண்பாடுகள், ஒத்திசைவுகள் மற்றும் தொடர்புகளின் பின்னர் ஒன்று கலந்து தற்போது ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர்.

நீண்ட காலம் தமிழ் மக்களின் பூர்வீக பூமியாகவே கிழக்கு மண் காணப்பட்டது. கணக்கெடுப்புகளின்படி கி.பி.15 ஆம் நூற்றாண்டுவரை பெரும்பான்மைத் தமிழர் களுடன் ஒருசில அரேபிய வழிவந்த சோனக மக்களும் பல்வேறு தொடர்புகளின் நிமிர்த்தம் குறைந்தளவு சிங்கள மக்களுமே இங்கு வாழ்ந்து வந்துள்ளனர். பௌத்த மதத் தமிழர்களும் கணிசமானளவு இருந்தனர். இங்கு கண் டெடுக்கப்பட்டுள்ள பௌத்த தொல்லியல் அடையாளங்கள் பௌத்தமத தமிழர்களுடயவையேயாகும்.

15 ஆம் நூற்றாண்டின் பின்னர் போர்த்துக் கேயருடன் ஏற்பட்ட வர்த்தகப் போட்டி காரணமாக புத்தளம் போன்ற மேற்குக் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் போர்த்துக்கேயரால் பாதிக்கப் பட்டு கண்டி மன்னனிடம் தஞ்சமடைந்தனர். பின் கண்டி மன்னனின் ஆளுகைக்கு உட்பட்டு கிழக்கில் ஆட்சி செய்த தமிழ் சிற்றரசர்களின் நிலப் பிரதேசங்களில் அவர்கள் குடி யேற்றப்பட்டனர். இங்குள்ள முஸ்லிம்கள் வாழும் ஊர்களின் பெயர்கள் இறுதியில் "குடி" என அமைந்திருப்பது அவைகள் குடியேற்றங்கள் என்பதற்கு நல்ல சான்றாகும். அதன் பின்னர் அவர்கள் சில தமிழ் சமூகக் குழுக்களுடன் தொடர்புபட்டு ஒற்றுமையாக வாழ்ந்தனர். அதனால் "குடி" எனப்படாத தமிழர் கிராமங்களிலும் அவர்கள் நிலை கொண்டனர்.

இதுபோலவே இலங்கை சுதந்திரமடைந்ததி லிருந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களால் சிங்கள மக்கள் இங்கு குடியேற்றப்பட்டு வருகின்றனர். திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பிரதேச எல்லையோரங்கள் ஊடாக சிங்கள குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. 1961 இல் மட்டக்களப்பிலிருந்து அதன் இயற்கை வளங்கள் அடங்கிய தென்பகுதி பிரிக்கப்பட்டது. தென் மாகாணத் திலுள்ள சிங்களப் பகுதிகள் சில அதனுடன் சேர்க்கப் பட்டு சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது. இதனால் தமிழ் முஸ்லிம் மக்களுடன் சிங்கள மக்களும் கிழக்கு மாகாணத்தில் பிரதான சமூகமாக மாறினர்.

கிழக்கு மாகாணம் முதன்முதலாக கோல்புறூக் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டபோது 1 அக்டோபர் 1833 இல் உருவாக்கப்பட்டது. இது தற்போது கிட்டத்தட்ட 9996 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டது. அதில் நீர்ப்பரப்பு 635 சதுர கிலோமீட்டர். இலங்கையில் 2 வது பரப்பளவு கூடிய மாகாணமாகத் திகழ்கின்றது. ஆனால் ஆரம்பத்தில் இதனிலும் குறைவான பரப்பளவையே இது கொண்டிருந்தது. இலங்கை அரசாங்கங்களின் திட்டமிட்ட எல்லை நிர்ணயங்களினாலேயே இதன் பரப்பளவு அதி கரிக்கப்பட்டது.

எனவே வரலாற்று அடிப்படையில் நோக்கும் போது இங்குள்ள காணி நிலங்கள் மற்றும் இயற்கை வளங்கள் போன்றன மிக நீண்ட காலம் தமிழர் களுக்கே பூரண உரித்துடையவையாக இருந்துள்ளன என்பது தெளிவாகின்றது. பிற்பட்ட காலங்களில் தான் அவைகள் கொஞ்சம் கொஞ்சமாக ஏனைய இனங்களுக்

கும் உரித்தாகத் தொடங்கின. தமிழர்களுடைய நிலங்கள் மற்றும் வளங்கள் பெருமளவு பறிபோயினும் இன்றும் கிழக்கு மாகாண இன விகிதாசாரத்துடன் ஒப்பிடும் போது பெருமளவான நிலங்கள் தமிழர்களுக்கே உரித்தாக வுள்ளன. அதுவே இங்கு சமூக முரண்பாடுகளுக்கு முக்கிய காரணியாகவுமுள்ளது.

எது எவ்வாறு இருந்தபோதிலும் சமகாலத்தில் மூவின மக்களும் கலந்து வாழும் பல்லினத் தன்மையான ஒரு வளம் மிக்க மாகாணமாகவே கிழக்கு மாகாணத்தை நாம் அறிமுகப்படுத்தலாம். இங்கு அனைத்து இனங்களும் நெடுங்காலமாக ஒற்றுமையுடனே வாழ்ந்து வந்துள்ளனர். வாழ்ந்து வருகின்றனர். "வேற்றுமையில் ஒற்றுமை" எனும் தத்துவத்தைக் கடைப்பிடித்து சீரும் சிறப்புமாக வாழ்வது இங்குள்ள அனைத்து இன மக்களினதும் கடமையு மாகும்.

அண்மைக் காலமாக கிழக்கு மாகாணத்தில் புதிதாக காணிப் பிரச்சனைகள் உருவெடுத்துள்ளன. தமிழர்களின் நிலங்களை முஸ்லிம் மக்கள் ஆக்கிரமிக் கின்றனர் எனவும் தமிழ் முஸ்லிம் மக்களின் நிலங்களை சிங்கள மக்கள் ஆக்கிரமிக்கின்றனர் எனவும் குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இதற்கான உண்மை யான நியாயபூர்வமான காரணங்களை நாம் ஆராய வேண்டும். உண்மையில் திட்டமிட்ட வகையிலோ இயற் கையான முறையிலோ கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் களின் இனவிருத்தி ஏனைய இனங்களுடன் ஒப்பிடும் போது அண்மைக் காலமாக திடீரென்று அதிகரித்துள்ளது. இதில் மறைப்பதற்கு ஒன்றுமில்லை. இதனை முஸ்லிம் புத்தி ஜீவிகள் பலரும் கூட சுட்டிக் காட்டியுள்ளனர். இவ் விடயத்தை தவறென்று கூறி அச் சமூகத்தின் மீது மற்றைய இனங்கள் காழ்ப்புணர்ச்சி கொள்ளவும் முடியாது. அது அவர்கள் சமூகம் சார்ந்த விடயம்.

ஆனால் முஸ்லிம்களுடைய மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்கனவே குறைந்த நிலப் பரப்பில் வாழ்ந்த அம் மக்களுக்கு மேலும் காணிகள் தேவைப் படுகின்றன. அவ்வாறான நிர்ப்பந்தத்திற்குள் அவர்கள் தள்ளப்படுகின்றனர். அது அவர்களின் பிழையுமல்ல. இதன் காரணமாக அவர்கள் தமிழர்களிடம் இருந்து சட்ட பூர்வ மாக காணிகளை வாங்குகின்றனர். தமது அரசியல் பலத் தைப் பயன்படுத்தி தமிழர் பிரதேசங்களில் இருக்கும் அரச காணிகளை சுவீகரிக்கின்றனர். இடப் பற்றாக்குறை காரணமாக அரசாங்க ஒத்துழைப்புடன் வயல் நிலங்களை யும், குளங்களையும் மற்றும் நீர்நிலைகளுள்ள பிரதேசங்களையும் நிரப்பி குடியிருப்புக்களை அமைக் கின்றனர். இதற்கு உதாரணமாக அக்கரைப்பற்று வட்டமடு மேய்ச்சல் தரை விடயத்தையும், கல்முனை நகர அபிவிருத்தித் திட்டத்தையும், அம்பாறை மாவட்டங்களில் பெருமளவு வயல்களையும், குளங்களையும் மண்ணிட்டு நிரப்பி குடியிருப்புக்களை ஏற்படுத்துதலையும் மற்றும் மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களில் தமிழர் பிரதேசங்களை ஊடுருவும் திட்டங்களையும் குறிப் பிடலாம்.

ஒருசில தனிநபர்கள் தான் தமிழர்களின் மயானங் களையும், ஏனைய பொதுக் காணிகளையும் அபகரிக்க முற்படுகின்றனர். இதற்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாக மட்டக்களப்பு முறாவோடையில் தமிழ்ப் பாடசாலை ஒன்றின் விளையாட்டு மைதானம் ஒன்றையும், அம்பாறை அட்டப்பள்ளம் எனும் தமிழ்க் கிராமத்தின் சுடுகாட்டு நிலத் தையும், பெரியநீலாவணை கிராமத்தின் சுடுகாட்டு நிலத்தையும் மற்றும் கல்முனை தரவைப்பிள்ளையார் ஆலய மடத்து வளவையும் (இன்றும் வழக்கு விசாரணை நடந்துகொண்டுள்ளது) முஸ்லிம் இனத்தைச் சார்ந்த தனியார்கள் அபகரிக்க முற்பட்டுள்ளமையைக் கூறலாம். இன்னும் இதுபோன்று பல ஆயிரக்கணக்கான பிரச்சனைகள் நடந்துகொண்டிருக்கின்றன. முன்னமே ஆயிரக் கணக் கான தமிழர் காணிகள் இவ்வாறு பறிபோயுமுள்ளன.

இதுபோல் கிழக்கில் முஸ்லிம் மற்றும் தமிழர் பிரதேசங்களில் சிங்கள மக்களின் ஆக்கிரமிப்புகளும் மெல்ல மெல்ல நடைபெறாமல் இல்லை. அம்பாறையில் தீகவாபியை அண்டிய பிரதேசங்களிலும், மல்வத்தை பொத்துவில் போன்ற பகுதிகளிலும் மற்றும் திருகோண மலையின் எல்லைப் பகுதிகளிலும் அரசாங்கத் திட்டங்களுடன் கூடிய ஆக்கிரமிப்புக்கள் இடம்பெறு கின்றன. அண்மையில் அம்பாறையில் முஸ்லிம்களின் பள்ளிவாசலும் வர்த்தக நிலையங்களும் சேதமாக்கப் பட்டமை இந்தப் பின்னணியிலேயாகும். அதுபோல் பல முஸ்லிம் கிராமங்களை அபகரிக்கும் திட்டங்களும் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் அம்பாறை நிருவாகப் பிரிவின் உயர் பதவிகளில் சிங்கள இனத்தவரே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளால் கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு ஒருவிதமான அச்ச நிலை ஏற்பட்டுள்ளது. எங்கே தங்கள் பூர்வீக நிலங்கள் பறிபோய் கிழக்கில் தங்களின் இருப்புக்கே ஆபத்து வந்துவிடுமோ என அவர்கள் பயப்படுகின்றனர். அதற்கான முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இதனால் சில நேரங்களில் இனங்களுக்கிடையே முறுகல் நிலைகள் ஏற்படுகின்றன. ஆனால் முஸ்லிம்களுக்கும் சிங்கள மக்களுக்கும் பின்புலமாக அவர்களின் அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும் மற்றும் உயர் பதவிகளிலுள்ள அரச உத்தியோகத்தர்களும் உள்ளனர். தமிழர்களைப் பொறுத்த வரையில் உள்ளூர் அரசியல் வாதிகளைத் தவிர மேல்மட்ட அரசியல்வாதிகள் எவரும் இப்பிரச்சனை களைக் கண்டுகொள்வதில்லை.

**(19 ஆம்பக்கம் பார்க்கவும்)**

# பரம்பரை கைநாடி வைத்தியத்துக்காய் ஆசிரியப் பணியையே துறந்த பெண்




**தொடர்புக்கு : ச.இராசம்மா - 0772862585, 0774636504**

கைதடியில் சித்தமருத்துவத்துறையினரால் நடாத்தப்பட்ட கண்காட்சியில் அனைவரது பார்வையிலும் ஈர்க்கப்பட்டவர் தான் முள்ளியவளையில் வசித்து வரும் சந்திரலிங்கம் இராசம்மா. இவர் கைநாடி பிடித்துப் பார்த்து நாட்டு வைத்தியம் செய்வதில் சிறந்து விளங்குகின்றார். 90 வயதில் தன்னம்பிக்கையோடும் ஆர்வத்தோடும் தனது பாரம்பரிய சிகிச்சை முறையை செய்து வருகின்றார். தனது இந்த சேவைக்காகவே ஆசிரியப்பணியை இடை நிறுத்திவிட்டு மக்களுக்கு தொண்டாற்றி வருகின்றார். எந்த நெருக்கடி வந்தாலும் தனது பணியை இடையறாது செய்து வருகின்றார்.

நவீன விஞ்ஞான வளர்ச்சி துரித கதியில் முன்னேறி வருகின்றது. இந்தக் காலத்திலும் இப்படி ஒரு விடயம் இன்று வரைக்கும் அழியாது இருக்கின்றது என்பது எம்மை பிரமிக்க வைக்கின்றது. இந்தச் சேவையை நான்காவது சந்ததியாக தனது பிள்ளைகளும் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பது அவரது ஆசையாகும். அவ்வாறே அவரது பிள்ளைகளும் தொடர முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள். இவர் பல வகை நோய் களுக்கு சிகிச்சை அளிக்கின்றார். கைநாடி பிடித்தே என்ன நோய் என்பதைக்கண்டு பிடித்து சிகிச்சையளித்து வரு கின்றார். அதாவது வாதரோகம், சர்மரோகம், சுழுக்கு, சர்வாங்க, பாலரோகம், கண்நோய், வலிப்பு, சுவாசரோகம், மூலரோகம், மஞ்சற்காமாலை, மாங்கம், காக்கைவலி, பீனிசரோகம், வயிற்றுப்போக்கு போன்ற நோய்களுக்கு சிகிச்சையளித்து வருகின்றார்.

**- விக்கினேஸ்வரி-**

சந்திரலிங்கம் இராசம்மா சொல்வதைக் கேட்போம். முள்ளியவளையில் நான் வசித்து வருகின்றேன். எனக்கு இப்பொழுது 90 வயதாகிவிட்டது. இந்த வயதிலும் நான் தனியாகவே இருந்து சமைத்து சாப்பிட்டு எனது வேலைகளைச் செய்து வருகின்றேன். நான் 55வருடங்களாக பாரம்பரிய சிகிச்சை முறையான கைநாடி வைத்தியம் செய்து வருகின்றேன். எனக்கு முதல் எனது இரண்டு சந்ததியினர் இந்த சேவையை செய்து வந்தார்கள். மூன்றாவது சந்ததியாக நான் தொடர்ந்து செய்து வருகின்றேன். எனது பேரனார் செய்து அதற்குப் பின்னர் எனது தகப்பனார் செய்து வந்தார். அவர் இறந்த பின்னர் நான் எனது ஆசிரியப்பணியையும் இடையில் விட்டிட்டு இதில் ஆர்வமுள்ளதாலும் பரம்பரையாக சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடும் செய்து வருகின்றேன். எனக்குப் பின்னர் என்னுடைய பிள்ளைகள் இந்த சேவையைச் செய்ய வேண்டும் என்று ஆசைப்படு கின்றேன். அதை அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது. அதில் எனது பிள்ளைகளும் ஆர்வமாக இருந்து எனக்கு ஒத்தாசைகள் செய்து தருகிறார்கள். பழைய ஏடுகளை வைத்து படித்தே நாம் இந்த சிகிச்சை முறைகளைச் செய்து வருகின்றோம். மூலிகைகளையும், தாவர இலைகளையும், வேர்கள், தண்டுகள், காய், பூ இவற்றின் மூலமே இதற்கான மருந்து களைத் தயாரிக்கின்றோம். பழைய முறைப்படியே நான் மருந்துகளை தயாரித்து வருகின்றேன். வவுனியா விற்கு எனது பிள்ளைகள் சென்றுதான் மூலிகைகள் வாங்கி தருகின்றார்கள். தாவர இலைகள், வேர், தண்டுகள், கிழங்கு வகைகளை நான் அயலில் தேடி எடுத்து வருவேன். தாமரைக்கிழங்கு சொந்தக்கார பெடியள் பிடுங்கி தருவினம். சிகிச்சைக்கு மருந்தாக தூள் வகைகள், கூட்டுக்குளிசை, எண்ணெய் போன்றவற்றையே வழங்கு கின்றேன். மருந்துகளை கையாலை உரலில் இடித்து மண் சட்டியிலை வெள்ளைத்துணி போட்டு அரித் தெடுக்கிறனான். எண்ணெய் காய்ச்சிறதும் மண் சட்டி யிலைதான்.

தற்போதைய நவீன மருத்துவ உலகத்திலும் எனது சிகிச்சையில் எந்த மாற்றமும் இல்லை. அன்று எவ்வாறு சிகிச்சை அளித்தேனோ அவ்வாறே இன்றும் செய்து வருகின்றேன். தூர இடங்களிலிருந்தும் வந்து சிகிச்சை பெறுகின்றார்கள். நிறையப்பேர் பரம்பரையாகவே என்னிடம் தான் வைத்தியம் செய்கிறார்கள். இந்த வைத்தியமுறையால் எந்தப் பக்க விளைவுகளும்

ஏற்படாது. இந்த மருந்துகளை நானே தயாரிப்பதனால் எனது சுவாசத்தில் இவை கலப்பதனால் எனக்கு இந்த வயதிலும் எந்த நோய் நோயுமின்றி நீண்ட ஆயுளுடன் வாழ்கின்றேன். நான் வைத்தியசாலைப் பக்கம் போய் அறியேன். பழைய ஏடுகளில் (வாகடம்) கற்றதையும் அனுபவத்தையும் வைத்தே சிகிச்சை செய்வதனால் இன்றும் எனது வைத்தியத்துறையில் நின்று நிலைத் திருக்கக் கூடியதாக இருக்கின்றது.

எனது பணியினைப் பாராட்டி முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்தினரால் பண்பாட்டு விழாவின் போது பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌர வித்தார்கள். இதுவரை காலமும் பதிவுகள் எதுவும் செய்யாமலே எனது சேவையை செய்து வந்தேன். தற்பொழுதுதான் பதிவிற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றேன். நான் அயல் வீடு, உறவினர் வீடுகளுக்குச் சென்று பொழுதைப் போக்குவதில்லை. எனது பொழுதுபோக்கே வைத்தியப் பணிதான். இதை ஒரு சேவையாகவே செய்து வருகின்றேன். நான் இவ்வாறு எனது பணியைச் செய்து நானே எனது வாழ் வாதாரத்தை பார்த்துக் கொள்வது மிகவும் சந்தோசமான ஒரு விடயமாகும்.

இறுதி யுத்தத்தின் போது எனது வீடு சொத்துக்கள் அழிந்து விட்டன. தற்போது ஒழுங்கான ஒரு வீடு எனக்கு இல்லை. மருந்து தயாரிப்பதற்கான பொருட்கள் இல்லை. அதனால் நான் பெரிய சிரமத்தை எதிர்கொள்கின்றேன். இருப்பதை வைத்தே எனது சேவையை தொடர்கின்றேன். நான் பணத்திற்காக இந்த சேவையைச் செய்யவில்லை. அவர்கள் தரும் பணத்தை ஏற்றுக்கொள்கிறேன். ஆங்கில வைத்தியம் என்றால் எங்கட சனம் விழுந்தடிச்சு நிறையக் காசுகள் கொட்டி வைத்தியம் செய்யுங்கள். இப்படியான இடங்களுக்கு வருகில் 100 ரூபா அல்லது 50 ரூபா வோடதான் வருங்கள். என்ன செய்யிறது தாறதை வாங் கிக்கொண்டு மருந்துகள் கொடுக்கிறனான். மூலிகை களின் விலையும் இப்ப கூடிக்கொண்டு போகுது. வவுனியாவிற்கு போய்த்தானே மூலிகைகள் வாங்கி

**“எனது பொழுதுபோக்கே வைத்தியப் பணிதான். இதை ஒரு சேவையாகவே செய்து வருகின்றேன். நான் இவ்வாறு எனது பணியைச் செய்து நானே எனது வாழ் வாதாரத்தை பார்த்துக் கொள்வது மிகவும் சந்தோசமான ஒரு விடயமாகும்”**

வரவேணும். அதுகளாலை செலவு கூடத்தான். அதற்காக எனது சேவையை என்னால் கைவிட முடியாது. எனது இறுதி மூச்சு வரை இந்தப் பணி தொடர்ந்த வண்ணம் இருக்கும். கைநாடி பிடித்தே வரும் நோயாளர் களுக்கு என்ன நோய் என்று கண்டுபிடித்துச் சொல்வேன். அதற்கு சிகிச்சையும் அளிப்பேன். கைநாடி பார்க்கிறது விடியத்தான் பார்க்கவேணும். அதுவும் வெறும் வயிற்றோட வரணும். அப்படி இல்லையென்றால் அடுத்த நாள் விடிய வரச்சொல்லித்தான் பார்ப்பேன். வீட்டிலை மட்டுமல்ல வரமுடியாது படுக்கையிலை கிடக்கிற நோயாளர்கள் என்றால் யாரும் வந்து கூட்டிட்டு போனால் போய் பார்த்து சிகிச்சையளிப்பேன். என்னிடம் வைத்தியம் செய்பவர்கள் தொடர்ந்து தமது நோய்க்கு என்னிடமே சிகிச்சை பெற்று பயனடைகின்றார்கள். இன்றும் மேலும் மேலும் வருகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றதே தவிர குறையவில்லை. அறிந்து அறிந்து தூர இடங்களிலிருந்தும் வருகின்றார்கள். கௌரவிப் புக்கள் எல்லாம் எனக்கு ஊக்கத்தையும் ஆர்வத்தையும் அதிகரித்துள்ளது என்கிறார்.

இந்த அம்மாவின் செயற்பாடுகள் வயது ஒரு சேவைக்கோ ஆர்வத்திற்கோ ஒரு தடையல்ல. மனமிருந் தால் எதையும் சாதிக்கலாம் என்பதை எடுத்துக்காட்டு கின்றது. அரச உத்தியோகம் தான் வேண்டும் என்று படித்து பட்டம் பெற்றவர்கள் பலர் சோம்பேறியாக எந்த முயற்சியுமில்லாமல் இருக்கின்றார்கள். ஆனால் அவர் தனது அரச சேவையைக் கூட இந்த சேவைக்காக அர்பணித்திருக்கின்றார். அவர் நீண்ட ஆயுளுடனும் ஆரோக்கியத்துடனும் தொடரவேண்டும் என வேண்டு கின்றோம். ●

---

**(17 ஆம் பக்க தொடர்ச்சி)**

உண்மையில் இங்கு வாழும் மூவின மக்களில் எந்தக் குறிப்பிட்ட ஒரு மக்களின் மீது மட்டும் நாம் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியாது. இப்பிரச் சனைகளுக்கு முக்கிய காரணம் அரசாங்கங்களின் கொள்கைகளிலும், சட்டங்களிலும் மற்றும் அமுலாக் கலிலும் காணப்படும் பாரிய குறைபாடுகளும் பக்கச் சார்புகளுமேயாகும். மக்கள் நலன் கருதி பக்கச் சார்பற்று முன்கூட்டியே உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை அரசாங்கங்களின் தவறாகும்.

எனவே இனிவரும் காலங்களிலாவது கிழக்கு மாகாணத்தில் அரசாங்கம் “நிலைத்திருக்கும் அபிவிருத்தி” அதாவது எதிர்கால சந்ததிக்கு பாதிப்பு ஏற்படுத்தாத அபிவிருத்தி என்பதை நோக்காகக் கொண்டு சட்டங்களை இயற்றி உரியவாறு அமுல்படுத்துவதுடன் இங்கு வாழும் சகல மக்களும் மற்றைய இனங்களை அசௌகரியத் திற்கு உள்ளாக்காத வகையில் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இன வேறுபாடுகளையும் வன்முறைகளையும் களைய வேண்டும். அப்போதுதான் ஒரு சுபீட்சமான கிழக்கு தேசத்தில் நாம் வாழலாம். ●

# தமிழ் அரசியலை அறிவியல் மயப்படுத்த வேண்டும்



அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு எழுதிய பூகோளவாதம், புதிய தேசியவாதம் நூல் வெளியீடு 24.02.2018 சனிக்கிழமை மாலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நூல்வெளியீட்டு விழாவில், முதற்பிரதியினை அருட்தந்தை ஜெயசீலன் அடிகளார் வெளியிட்டு வைத்தார்.

அரசியல் சமூக ஆய்வாளர் நிலாந்தன் உரையாற்றுகையில் பின்வரும் விடயங்களை எடுத்துரைத்தார்.

கொள்கை ஆய்வு, தந்திரோபாய ஆய்வு, மூலோபாய ஆய்வு போன்றவற்றை ஈழப்போரில் சமாந்தரமாக செய்து கொண்டு வரும் ஒரேயொரு ஆள் மு.திருநாவுக்கரசு தான். இத்துறைகளில் நாங்கள் இவரைப் போன்ற தனிமனிதர்களைத் தான் வைத்திருக்கின்றோம். எங்களிடம் நிறுவனங்கள் மிகக் குறைவு. ஒரே ஒரு நிறுவனம் தான் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் தொடங்கியிருக்கின்றது. இவ்வாறான ஒரு பின்னணிக்குள் தான் இந்நூல் உங்கள் முன் வைக்கப்படுகின்றது.

இது மு.திருநாவுக்கரசு இதுவரை வெளியிட்ட நூல்களிலே மிகப் பெரிய நூல். இது அவருடைய எடுத்துரைப்பு. இது போல ஏனையவையும் வர வேண்டும். அவர் சொல்வது பிழை என்றால் அதை அந்தத் தளத்தில் எதிர்க்கின்றவர் தன்னுடைய எடுத்துரைப்பைக் கொண்டுவர வேண்டும். புவிசார் அரசியல் தொடர்பில் அவர் தன்னுடைய சில கருத்துக்களை முன்வைக்கின்றார். இது தொடர்பாக வாதப்பிரதிவாதங்கள் உண்டு என்பதை நான் அறிவேன். அவருடைய புத்தகம் தொடர்பாக நாங்கள் முகநூலில் விளம்பரம் போட்ட போது அதற்கு எதிர்வினை அவ்வாறு காட்டப்பட்டிருக்கின்றது. அதைச் செய்கிறவர்கள் புலம்பெயர்ந்த தரப்புக்களில் பலமாகவும், வளங்களோடும் இருக்கின்றார்கள். எனவே இந்த எடுத்துரைப்பு பிழை என்றால் அவர்கள் தங்களுடையதை முன்வைக்க வேண்டும். ஈழத்தமிழர்கள் எப்படி புவிசார் அரசியலையும் பூகோள அரசியலையும் கையாள வேண்டும் என்பதனை அவர்கள் கூற வேண்டும்.

மு.திருநாவுக்கரசு திரும்ப திரும்ப சொல்லுவார் ஈழத் தமிழருடைய பேரம் பேசும் சக்தி என்பதே அவர்களுடைய புவிசார் அமைவிடம் தான் என்று. இந்த புவிசார் அமைவிடம் காரணமாகத்தான் ஈழத்தமிழர்களுக்கு ஒரு பேரம் இருக்கின்றது என்று. இப்பொழுது தாமரை மொட்டின் மலர்ச்சியோடு அந்த புவிசார் நிலைமைகளில் புதிய சுற்றோட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நிலைமாறு கால நீதிக்கு கீழ் பத்தோடு பதினொன்றாக இனப்பிரச்சினைக்கான தீர்வையும் முன்வைத்த வேறுநாடுகளும் ஐநாவும் இனியும் அதைச் செய்ய முடியுமா? அல்லது இனியும் அதைச் செய்ய விடலாமா? என்பதனை தமிழ்மக்கள் தீர்மானிக்க வேண்டும். புதிய சுற்றோட்டம் தமிழ் மக்களுக்கு சாதகமான வாய்ப்புக்களை திறக்க முடியும் அல்லாவிடின் திறக்கச் செய்ய வேண்டும். இதில் எப்படி காய்களை நகர்த்துவது எவ்வாறு நகர்த்துவது என்பது குறித்து தமிழ் மக்கள் முடிவெடுக்க வேண்டும்.

அவ்வாறு முடிவெடுப்பதற்கு கொள்கை ஆய்வுகளையும் தந்திரோபாய ஆய்வுகளையும் செய்யவல்ல வல்லுனர்கள் நிறுவனமயப்பட வேண்டும். நிறுவனமயப்பட்டு அவர்கள் அது தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரைகளை முன்வைக்கும் பொழுது தான் முடிவெடுக்கும் தகைமையுள்ள அரசியல் தலைவர்கள் அவற்றைக் கண்டு அதைப்பற்றி யோசித்து அதைப்பற்றி ஆலோசித்து முடிவுகளை எடுப்பார்கள். தமிழ் அரசியலை அறிவியல் மயப்படுத்துவது என்பது அதுதான். சில அரசியல் தலைவர்கள் தங்களுக்குள் கூடி முடிவெடுப்பதல்ல அரசியல் தீர்மானம். நாங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாக இருப்போம் என்பதற்காக எல்லா முடிவுகளையும் நாங்கள் எடுக்க முடியாது. எங்களுடைய துறைக்கு வெளியில் விவகாரங்கள் இருக்கமுடியும். எங்களுக்கு தெரியாத பரப்புக்களில் அறிஞர்கள் இருக்க முடியும். மேற்கத்தேய தலைவர்கள் ஒரு விவகாரத்தைப் பற்றி பேசுவதாக இருந்தால் அது தொடர்பில் ஞானமுள்ளவர்களை கூப்பிட்டு இப்படி ஒரு விடயம் இருக்கின்றது, இதைப்பற்றி பேசவேண்டும், இந்த இடத்தில் பேசப் போகின்றோம், இப்படி இப்படி கேள்விகளுக்கு எப்படி பேசலாம் சொல்லுங்கோ என்று கேட்டு அவர்களிடம் ஆலோசனையைப் பெற்றுக்கொண்டுதான் பேசப்போவார்கள்.

முதலமைச்சர் எழுதிக்கொண்டு போய் பேசுவதை ஒரு தரப்பு கிண்டலாகச் சொல்லுகின்றது. ஆனால், அது ஒரு ஒழுக்கம். பொறுப்பான கதிரைகளில் இருப்பவர்கள் ஒரு வார்த்தையும் வீணாக சொல்லமுடியாது. அப்படி பார்க்கும் பொழுது நான் என்ன பேசப்போகின்றேன் என்பதில் தலைவர்கள் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். அதை ஒரு பலவீனமாக எடுத்துக்கொள்ள முடியாது. வாயில் வந்தபடியெல்லாம் தலைவர்கள் பேசிவிட்டு போக முடியாது. தொலைபேசியில் கூட பேசிவிட்டு போக முடியாது. அதற்கு ஒரு பொறுப்பு இருக்க வேண்டும். அப்படி பார்க்கும் பொழுது அது பற்றி முன் கூட்டியே ஒரு தயாரிப்பு இருக்க வேண்டும். அப்படிப் பட்ட தயாரிப்பில் போகும் பொழுது துறைசார் அறிஞர்களைக் கண்டு துறைசார் அறிஞர்களுடைய நிறுவனங்களை அணுகி துறைசார் அறிவை பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் எனக்குத் தெரியாது என்றால் மற்றவர்களிடம் கேட்க வேண்டும். எனவே அரசியல் தலைவர்கள் முடிவெடுக்கும் முன் துறைசார் நிபுணர்களைக் கண்டு கதைத்து அது தொடர்பாக ஆலோசித்த பின்னர்தான் முடிவுகளை எடுக்க வேண்டும். அதற்குப் பெயர்தான் அரசியலை அறிவியல் மயப்படுத்துவது என்பதாகும். அவ்வாறு அரசியலை அறிவியல் மயப்படுத்தும் ஒரு நோக்கத்தோடு இந்நூல் முன்வைக்கப்படுகின்றது.

தமிழ் அரசியலை அறிவியல்மயப்படுத்த வேண்டுமென்று மு.திருநாவுக்கரசு திரும்பத் திரும்ப சொல்லுவார். இரண்டு ஆண்டுகளுக்கு முன் நவிப்பிள்ளை அம்மையார் கனடாவிலுள்ள யோர்க் பல்கலைக் கழகத்திற்கு வந்த பொழுது ஒரு கூட்டத்தில் பேசும் பொழுது ஈழத்தமிழர்கள் தங்களுடைய அரசியலை அறிவியல் மயப்படுத்த தவறிவிட்டார்கள் என்று கூறியிருந்தார். அப்பொழுது அந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய பெண் பின்னர் சொன்னார். இதை இவர் 2016ஆம் ஆண்டு சொல்லுகிறார். திரும்பவும் 2020ஆம் சொல்லுகின்ற நிலமை வரக்கூடாது என்று. அப்படி வரக்கூடாது என்பதை யோசித்துத்தான் நாங்கள் இதுபோன்ற நூல்களை முன் வைக்கின்றோம்.

அதில் உங்களுக்கு விமர்சனங்கள் இருக்கலாம். விமர்சனமுள்ளவர்கள் உங்களுடைய எடுத்துரைப்பை முன்வையுங்கள். இப்படியான வாதப்பிரதிவாதங்கள் ஊடாக அடுத்தகட்ட அரசியலைப்பற்றி நாங்கள் யோசிக்கலாம். தமிழ் அரசியல் இரு கட்சி ஜனநாயகப் பண்புடையதாக மாறிக்கொண்டிருக்கும் இச்சூழலில் தாமரை மொட்டின் எழுச்சியோடு பிராந்திய வலுச்சமநிலையில் தளம்பல்கள் உண்டாகிக் கொண்டிருக்கும் இச்சூழலில் தமிழ் மக்கள் அரசியலை இன்னும் அதிகமாக அறிவியல் மயப்படுத்த வேண்டியிருக்கிறது. அப்படி செய்தால் மட்டும் தான் தமிழ் மக்கள் அனைத்துலக மற்றும் பிராந்திய சூழலை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற செய்தியை முன் வைத்து இந்நூலை நாங்கள் வெளியிட்டிருக்கின்றோம்.

**(06 ஆம் பக்க தொடர்ச்சி)**

ராமநாதன் அவர்கள் "நாங்கள் பெண்களை தனியாக விட்டு விட வேண்டும். அவர்களுடைய வாழ்க்கை முழுவதும் அவர்கள் வீட்டுக்கு அர்ப்பணிக்க வேண்டும். கடவுளின் ஒழுங்கு எந்த விதத்திலும் குலைக்கப்படக் கூடாது. அது சரியான முறையில் பின்பற்றப்பட வேண்டும்" என்று கூறினார்.

இவ்விருவரின் கருத்து பெண்களை வீட்டுக்குள்ளேயே அடக்கி வைக்க வேண்டும். அவர்களுக்கு எந்த உரிமைகளும் கிடைக்க கூடாது என்பதனை வலியுறுத்துவதாக அமைகின்றது. எனக்கு ஒன்று விளங்கவில்லை. எது கடவுளின் ஒழுங்கு? பெண்ணை வீட்டுக்குள் அடைத்து வைக்க வேண்டும் என்பது கடவுளின் கட்டளையா? அக்கட்டளையையும் மூட நம்பிக்கையும் உடைத்தெறியும் வகையில் பெண்களிற்கு கிடைத்த வாக்குரிமை பெண்களின் வாழ்க்கைக்கு வலுவூட்டியது. எந்த தமிழ் சமூகம் பெண்ணுக்கு முட்டாள், வாக்களிக்க தெரியாதவள் என்று நாமம் சூட்ட நினைத்ததோ, அதே சமூகத்தில் இன்று தமிழ் பெண் இமாலய வெற்றியுடன் பயணித்து கொண்டிருக்கின்றாள் என்பதனை எவரும் மறக்க கூடாது.

ஆனால் தமிழ் சமுதாயத்தில் எல்லோரும் பெண்களுக்கு வாக்குரிமை கிடைப்பதை தடுக்க முன்வரவில்லை. குறிப்பாக அக்காலத்தில் (பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில்) வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்திய சட்டசபை உறுப்பினர் எல்.ரத்தினம் தனது கருத்தை பின்வருமாறு கூறினார். "ஏன் நாங்கள் இலங்கையிலுள்ள பெண்களை அடிமைகளாகவோ, அல்லது அரை அடிமைகளாகவோ பாவிக்க வேண்டும். அவர்களுக்குரிய வாக்குரிமையைக் கொடுக்க வேண்டும் என்பதை நாங்கள் உணர வேண்டும். அவர்கள் தங்கள் வாக்கை நியாயமாகவே பாவிப்பர்" எனக்கூறினார்.

எமது தமிழ் சமுதாயத்தில் பெண்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக வாக்குரிமை எனும் ஆயுதத்தை கையில் ஏந்தி அதனை அற வழியில் உபயோகித்து வெற்றி அடைந்தனர். இவ் வெற்றியால் தமிழ் பெண்கள் மத்தியில் சமுதாயம் பற்றிய சிந்தனை வேர்கொண்டு வளர்ந்தது. கல்வி, வாக்குரிமை இரண்டையும் பெற்ற பெண்கள் பிரித்தானியரிடம் இருந்து விடுதலை பெற்ற பின்னர் தமது இனவிடுதலைக்காக போராடத் தொடங்கினர்.

(ஆயுத போராளிகளான தமிழ்ப் பெண்கள் அடுத்த அத்தியாயத்தில்)



# ஈழவிடுதலைப் போராட்டத்தின் சாட்சியாளன்

## அமரர் பொன். பூலோகசிங்கம்

- கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்-

**தேசப்பற்று மிக்க சட்டத்தரணியும், தமிழ் உணர்வாளருமான பொன் பூலோகசிங்கம் கடந்த 05-03-2018 அன்று யாழ்ப்பாணம் புன்னாலைகட்டுவனில் மாரடைப்பால் காலமானார். அவரது நினைவலைகளின் சிறு தொகுப்பு கீழே..**

சட்டத்தரணியாக, எழுத்தாளனாக, விரிவுரையாளராக அடையாளப்படுத்தப்படும் பொன்.பூலோகசிங்கத்தின் மனிதநேயம் அளவிட முடியாத ஒன்றாகும். சுதந்திரன் பத்திரிகையின் உதவி ஆசிரியராக கடமை புரிந்த காலத்தில் மட்டுமல்ல அவரது வாழ்க்கை முழுவதும் தமிழ் தேசியத்தின் பற்றாளனாகவும், அதனை பாதுகாத்த துணிகர மனிதனாகவும் விளங்கினார். அவருக்கும் எனக்குமான உறவு 30 வருடங்களை கடந்தது. அக்காலம் முழுவதும் என்னை ஒரு நண்பனாக சகபாடியாக, மாணவனாக, உறவினனாக கருதி வாழ்ந்த மனிதன். ஒரு நொடிப்பொழுதிலும் மனக் கசப்போ முரண்பாடோ, வேறுபாடோ ஏற்பட்டது கிடையாது. அதனால் தானோ என்னவோ அவரது மறைவை என்மனம் ஏற்க மறுக்கிறது.

அவரது இயல்புகளுக்கெல்லாம் உச்சமானது அவரது மனிதநேயம். உண்மையை உண்மையாக பேசும் மனோ நிலை, உண்மைக்காக எதையும் இழக்கத் தயாரானவர். ஒரு தடவை என்மீது அவதூறான வழக்கொன்றை திட்டமிட்டு சில வேண்டத்தகாதவர்கள் முன்வைத்து என்னை நீதி மன்றில் நிறுத்தினார்கள். அதன் உண்மையை அறிந்த பொன். பூலோகசிங்கம் அதன் ஆரம்ப நாள் முதல் வழக்கு மேல் நீதி மன்றில் நிறைவுபெறும் வரை எனக்காக பாடுபட்டார். அவர் மீது பெரும் அச்சுறுத்தல்களும் துப்பாக்கிமுனை மிரட்டல்களும் வந்த போதும் அசைந்து கொடுக்காதவர். புகழ்பெற்ற பல சட்டவாதிகள் அச்சுறுத்தலை கண்டுவிட்டு ஓடிய போதெல்லாம் தனித்து நின்று உண்மைக்காக வாதாடியவர். அவரது எல்லையற்ற மனிதநேயத்தால் மேல் நீதி மன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்த போது தனது மேலங்கியைக் கழற்றி வைத்துவிட்டு சாட்சிக் கூண்டில் ஏறி தான் கண்ட உண்மையை வெளிப்படுத்தியவர். அவரது அச் செயல் என் நெஞ்சை உலுக்கியது. அவர் மீதான பற்றுதலை மேலும் அதிகரிக்க செய்தது. உன்னதமான மனித உள்ளத்தின் உணர்வின் வெளிப்பாட்டை அவரது செயல் உணர்த்தியது.

அவரது மறைவுக்கு மூன்று நாட்களுக்கு முன்பும் என்னை தொலைபேசியில் அழைத்து Russel எனும் அரசியல் அறிஞரின் அரசியல் கோட்பாடு பற்றிய நூல் ஒன்றினைக் குறிப்பிட்டு அதனை எடுத்துவருமாறும் கேட்டிருந்தார். திங்கட்கிழமை மாலை 4.00மணிக்கு ஒப்படைப்பதாகவும் நான் உரையாடியிருந்தேன். அவரது இயல்பில் பிரதான விடயம் நூல்களை சேகரிப்பதும் பாதுகாப்பதுமாகும். ஈழவிடுதலைப் போராட்டம் முழுவதும் வெளிவந்த அனைத்து நூல்களையும் சேகரித்தது மட்டுமன்றி தமிழ்த் தேசியத்திற்கானதும் அதற்கு எதிரானதுமான அனைத்து அரிய வகை நூல்களையும் பாதுகாப்பாக வைத்திருந்தவர். 1996 ஆம் ஆண்டு குடாநாட்டைவிட்டு இடம்பெயரும் போது அவற்றை விட்டுவிட்டு வந்தவர் மீண்டும் அவற்றை திரும்பி வந்து பாதுகாக்க திட்டமிட்ட போதும் முடியவில்லை. அவரது வாழ்வின் மிக பெறுமதியான பொக்கிசம் நூல்கள் மட்டுமே. நம்பிக்கையுடன் அவரிடம் வரலாம். நாம் தேடும் நூல்கள் அவரிடம் இருக்கும்.

இவரது அறிமுகம் 1987 இல் எனக்கு கிடைத்தது. இவரை அறிமுகப்படுத்தியவர் எனது ஆசிரியர் மு.திருநாவுக்கரசு. ஆனால் என்னை அறிமுகப்படுத்தும் போதே அவர் எனது விபரத்தை கேட்டுவிட்டு எனது சகோதரனுடன் தான் சட்டக்கல்லூரியில் கற்கும் போது நான்கு வருடங்கள் கொழும்பில் ஒரே அறையில் வாழ்ந்ததாகவும் அதன் தொடர்ச்சியாகவே உங்களை பார்க்கிறேன் என்றும் பெருமைப்பட்டுக் கொண்டார். இறுதிவரையும் அத்தகைய உறவை பாதுகாத்த மாமனிதன்.

அவருக்கு பிடிக்காத சில விடயங்கள் உண்டு. நூல்களில் கீறுவது. நூல்களை மடித்துப் படிப்பது, நூல்களைக் கிழிப்பது, நூல்களை ஊத்தையாக்குவது, நூல்கள் மீது தலைவைத்துப் படுப்பது இவை எல்லாம் கெட்ட செயலாகவே கருதுவார். அவரிடம் நூலை வாங்கினால் மீள ஒப்படைக்கும் வரை நாம் எல்லோரும் மிக கவனமாக செயல்படுவோம். ஏந்த தவறும் நிகழாது நூல்களை ஒப்படைப்போம். அவரைப் பார்த்தே நாமும் நூல்களை வாங்கப்பழகினோம். வாசிக்கத் தொடங்கினோம். ஒரு நாளேனும் வாசிப்பதை கைவிடாதவர் பொன்.பூலோகசிங்கம்.

எத்தகைய விடயத்தையும் ஆய்வுக் கண்கொண்டே தேடுவார், உற்று நோக்குவார், பகுப்பாய்வுக்கு உட்படுத்துவார். நிறைவில் ஒரு புலமையாளன் போல் பதிலிறுப்பார். ஆதாரங்களும் உசாத்துணைகளும் துல்லியமான பதிவாக அமையும். வயதான காலத்திலும் அவரின் பழைய நினைவுகளை அப்படியே மீட்டுவதைக் கண்டு ஆச்சரியப்பட்டிருக்கிறோம். அரசியல் வரலாற்றை வெள்ளம் போல் சொரிவார். ஏற்ற இறக்கங்களில் தத்துவம், சட்டம், மொழி, பண்பாடு, வெளிப்படும். அவர் சொல்லிக்கொண்டே இருப்பார். நாம் கேட்டுக்கொண்டே இருக்கலாம். சிறப்பான ஆசிரியர். ஆங்கில மொழியில் விற்பன்னர். ஆசிரியம் மேலோங்கிய ஆய்வாளன்.

அவரது மறைவு வேகமானது. அவர் படைப்பதற்கு அதிகமுண்டு. அதிக தகவல்களை கொண்ட களஞ்சியமாக விளங்கினார். ஈழவிடுதலைப் போராட்டத்தின் சாட்சியாளன். முள்ளிவாய்க்கால் வரை பயணம் செய்த அரசியல் சட்டப் போராளி. ஆயுதப்போராட்டத்தையும் முழுமையாக அனுபவித்த சட்டவாளன். அனைத்தின் பதிவுகளையும் வெளிக்கொண்டுவர வேண்டுமென அவாக் கொண்டவர்.

அவரது வாழ்க்கையும் மறைவும் ஈழத்தமிழரின் மனங்களில் என்றும் நிரந்தரமான பதிவுகளாக நிலைத்திருக்கும். அவரது ஆத்ம வல்லமையின் சாட்சிகள் எப்போதும் எம்மண்ணில் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

# பூதக்கண்ணாடி நொட்டைகள் !

நிமிர்வுகள் – 10

நெம்பு

## அப்புக்காத்தரும்... அன்னமாக்காவும்...

உவள் கனகத்தின்ர மேள், எப்படித் திரியுறாள் என்று பார்த்தனீங்களே...?

ஏன்..என்ன நடந்தது...?

நாலு பிள்ளையள் பெற்ற தாய் மாதிரியே திரியுறாள்...?

ஏன் அதுக்கு என்ன நாலு பிள்ளையள் பெற்ற தாய் எண்டு எழுதி ஒட்டிக்கொண்டே திரியுறது...?

மனிசனையும் விட்டுப் போட்டு, மினுக்கிக் கொண்டு ஊர்வலம் வாறாள்?

அவளே விட்டவள்... அவன் மனிசன்காரன்தானே இப்ப எத்தனை வருசமாய் அவளையும் பிள்ளையளையும் விட்டுப்போட்டு வேற ஆரோடயோ போனவன்...

ஓமோம்...அப்படித்தான்... ஆனா அதுக்கு இப்படியே இவள் திரியுறது...?

ஏன்.. என்ன பிழை...?

தன்ர பிள்ளையள் போடுற மாதிரி, கட்டையாய், இறுக்கமாய் உடுப்புகளும் போட்டு வெளிக்கிட்டுக் கொண்டு போறதே...

அவள், அவளுக்குப் பிடிச்சமாதிரி வெளிக்கிட்டுக் கொண்டு போனா மற்றவைக்கு என்ன வந்தது?

இந்த சனங்கள் எவ்வளவு கேவலமாய்க் கதைக்குது தெரியுமே...இப்பிடி அடிக்கடி இவள் வெளிக்கிட்டுத் திரியிறதையும் வேலைக்குப் போறதையும் பார்த்து...

நீங்கள் கண்டனீங்களோ...கேட்டனீங்களோ... சனம் சொல்லித்திரியிறதை... சனம் வந்து உங்களிட்டையும் சொன்னதோ..?

இல்லை..இல்லை.. அப்படியெண்டு அவளின்ர சொந்தக்காரப் பிள்ளை புவனம் தான் சொன்னவள்...

அதுவும் பிள்ளையளும் கஞ்சிக்கும் வக்கில்லாமல் சாகக் கிடக்கேக்க எங்க போனது உந்த சொந்தமும் சனமும்...? இப்ப அவள் வேலைக்குப் போய் தன்ர குடும்பத்தைக் கஷ்டமில்லாமல் பார்க்கேக்க தான், எல்லாரும் நொட்டை சொல்ல வாறியள்...

அதெண்டாச் சரிதான்.. அவையவை தங்கட ஊத்தையளை மறைச்சுக் கொண்டு, மற்றவையில பூதக்கண்ணாடி வச்சுப் பார்த்துக் கொண்டு திரியினம்..

## வழிகள் திறக்கட்டும்

வேலிகளே சிறைகளாகி,
பயிர்களை வாட்டுகின்றன...
காத்தல் மறந்து,
அழித்தலே தொழிலாயின...

தானே, தன் காலில் – சுயமாய்
ஒருவன் நின்றால்,
– அவன் தன்மானச் சிங்கம்!
ஒருத்தி நின்றால்,
– அவள் அவமானச் சின்னம்!

கட்டிற்குள் நின்றும்,
ஆறாய் பெருகுவாள்...
கட்டளைகள் இட்டும்,
கலங்கரை விளக்காய் நிற்பாள்...

தன் வழி பார்க்கும்
தைரியம் உள்ளவளை,
வீண்பழி சொல்லி,
வீட்டிற்குள் முடக்காதீர்...

கட்டற்ற உலகில்
காற்றாய்ப் பறந்து சென்று,
எல்லோரும் மகிழ்வுடன் வாழட்டும்...
வழிவிடுங்கள்...!

– உங்கள் வசை வாய்களை மூடி.

# இன்னும் எத்தனை மரணங்கள் வேண்டும்?





உலகில் நேர்ந்த கொடூரங்கள் பலவற்றை வெளியுலகுக்கு கொண்டுவந்த பெருமை ஊடகவியலாளர்களையும், புகைப்படப்பிடிப்பாளர்களையுமே சாரும். மேற்கு வியட்நாமில் குண்டுவெடிப்பு சம்பவத்தை அடுத்து சிறுமியொருவர் நிர்வாணமாக ஓடிவரும் புகைப்படம் தான் 19 வருடங்களுக்கு மேலாக நடந்து வந்த வியட்னாம் போரையே முடிவுக்கு கொண்டுவந்தது. அதே போல் இன்று சிரியாவில் நடக்கும் உள்நாட்டுப் போரிலும் குழந்தைகள் கொல்லப்படும் பல புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில், ஊடகங்களிலும் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றன.

அதே போல் ஈழத்தின் முள்ளிவாய்க்காலிலும் சாட்சியமற்ற போரை இலங்கை அரசு நடாத்தியதன் பின்னர் பல்வேறு ஊடகங்களிலும் வெளியாகிய படங்கள் சர்வதேச அளவில் புயலைக் கிளப்பியது. அது இலங்கைக்கு எதிராக ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைக் கவுன்சில் வரை எமது பிரச்சினையை கொண்டு செல்ல காரணமாகவும் அமைந்தது.

இன்று தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு காணாமல் போன உறவுகளின் பிரச்சினையும், அரசியல் கைதிகளின் பிரச்சினையும் முடிவுறாப் பிரச்சினையாக இருந்து வருகின்றன. அண்மையில் அரசியல் கைதி ஆனந்தசுதாகரனின் மனைவியின் இறப்பை அடுத்து இரு குழந்தைகள் அனாதரவாக்கப்பட்டுள்ள விடயம் கிளிநொச்சி ஊடகவியலாளரான முருகையா தமிழ்ச்செல்வனினால் தான் வெளியுலகத்துக்கு கொண்டு வரப்பட்டது. அவர் எடுத்த படங்கள் தான் தமிழ்மக்கள் வாழுமிடமெங்கும் பெருத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த வருடம் வைகாசி மாதம் “அரசியல் கைதிகள் விடுதலைக்கான தேசிய இயக்கம்” எனும் அமைப்பின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல் நிமிர்வு இதழுக்கு வழங்கிய பேட்டியில் சொல்லிய கருத்துக்கள் முக்கியமானவை,

“நல்லிணக்கம் பற்றி இந்த நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற அரசாங்கம் கதைத்துக் கொண்டிருக்கிறது. இந்த நல்லிணக்கத்தின் அடையாளமாக முதலாவது செய்யவேண்டியது என்னவென்றால் தமிழ் மக்களின் அரசியலோடு நேரடியாக தொடர்புபட்ட அரசியல் கைதிகளை விடுதலை செய்வதே. சர்வதேச வெசாக் தினத்தை கொண்டாடும் அரசாங்கம் ஒரு அரசியல் தீர்மானத்தை அரசியல் கைதிகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் நலன் சார்ந்து எடுக்க வேண்டும். ஆனால் அப்படியொரு அரசியல் தீர்மானத்தை அதிரடியாக எடுக்கும் நிலைப்பாட்டில் மைத்திரியின் நல்லாட்சி அரசும் இல்லை.

அரசியல் கைதிகளின் குடும்பங்களின் நிலை படுமோசமான நிலையில் உள்ளது. அரசியல் கைதிகளுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் இந்த தமிழ்ச் சமூகம் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதுகாப்புக் கொடுக்க முடியாது போனால் தமிழினத்தின் அடுத்த நகர்வுக்கு இளம் சந்ததியின் பங்களிப்பை எதிர்பார்க்க முடியாது. எங்களுக்காக போராடிய அரசியல் கைதிகளையும் அவர்களின் குடும்பங்களையும் அங்கீகரிக்கவில்லை என்று சொன்னால் அவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு இல்லை என்று சொன்னால் வரும் இளம் சந்ததி தமிழ் மக்களுக்காக அரசியலுக்கு இறங்க நிறைய யோசிப்பார்கள். இறுதியில் அது நடக்காமலே போய்விடும்.

ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் விடுதலைக்காகவே அரசியல் கைதிகள் செயற்பட்டனர். ஆனால் அவர்களின் குடும்பங்கள் இன்று தனித்திருக்கிறார்கள். இந்தக் குடும்பங்களுக்கிடையே ஒரு தொடர்புகளும் இல்லை. இந்த குடும்பங்களுக்கும் அரசியல் செயற்பாட்டாளர்களுக்கும் இடையிலோ சிவில் சமூகங்களுக்கு இடையிலோ கூட தொடர்பு இல்லாதுள்ளது. இது எமது எதிர்கால அரசியல் நகர்வுகளை பெரும் பாதிப்புக்குள் தள்ளப் போகின்றது. ஒரு பாதாளத்துக்குள் தள்ளப் போகின்றது. அரசியல் கைதிகளின் குடும்பங்களை ஒரு தொடர்பாடல் வலைப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும். இந்தவலைப்பாட்டில் அரசியல் தலைமைகளும் சிவில் சமூக அமைப்புகளும் முக்கிய பங்காற்ற வேண்டும்”.

அருட்தந்தையின் இந்தக் கருத்துக்களை தமிழ்ச் சமூகம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

தமிழ் அரசியல் தலைமைகள் அரசியல் கைதிகள் விவகாரத்தை கண்டு கொள்ளாத தன்மையே இன்றும் உள்ளது. அரசியல் கைதிகளது குடும்பங்கள் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளும் தள்ளப்பட்டுள்ளன. இவற்றுக்கு தமிழ்ச் சமூகம் கூட்டுப் பொறுப்பை ஏற்க வேண்டாமா?

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 24.03.2018 அன்று ஜெயசிறீ அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.